சிஜ்ஜிஸ்டர் நெ. 2041

தென்றல்

தனிப்பிரதி விலை ஒரு அணா.

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6 மாத சந்தா ,,	— ,,	1—12
வேனி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விதிதம்

மலர் 7 | சனிக்கிழமை, பிரஜோத்பத்தி கார்த்திகை 28உ (13—12—1931) | பகுதி 33

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் கடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய திலகம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளைழுத்து, நித்திலாயின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, சரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த சரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மஹா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் காசரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்சொரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் எற்படும் வயிற்றுப்போக்குகள், காலரோகிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்விதமலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணு 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணு 8. கட்டுவாதி மாத்திரை அணு 8. காரமாத்திரை அணு 8. சுகபேதி மாத்திரை அணு 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கில் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சிராப்பள்ளி

இரத்தவிர்த்தி, தேகபலம், தாதுபுஷ்டிக்கு

மனோஞ்சித லேகியம்

தங்கபஸ்பம்

சேர்த்துச் சாப்பிடுங்கள்.

சகலவித உஷ்ணத்தையும், இரத்தக் கொதிப்பையும் அடக்கி நல்ல இரத்தத்தை ஏராளமாய்ப் பெருக்கித் தேக புஷ்டி, பலம், ஆண்மை வீரியவிர்த்தி, இந்திரிய விரைவு, தாதுக்கட்டு, போக இச்சை முதலியவைகளை உண்டுபண்ணி அடங்காத இன்பத்தைக் கொடுக்கும். திடகாத்திரம், மூளை பலம், ஞாபகசக்தி, அறிவு வளர்ச்சி, மனோவலிமையையும் உண்டாக்கும்.

அதிக ருசிகரமுள்ளது. சிறுவர் முதல் ஆண், பெண் யாவரும் சாப்பிடலாம். மாணாக்கர்களுக்கு மிகவும் அவசியமானது. எலும்பை உருக்கும் உஷ்ணத்தை அடக்கி இரத்த விர்த்தியை உண்டுபண்ணி தேகத்தை வளர்க்கும். தனி லேகியமும் சாப்பிடலாம்.

30 வேளை லேகியம் ரூபா 3. தங்கபஸ்பம் 30 வேளை ரூபா 7.

நம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

தெண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவை களைக் கொடுத்து நாம்புகளுக்குப் பலத்தைத் தரும். சிதக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொர்ப்பன ஸ்கலிதம் இவை களைக் குணப்படுத்தும்.

1-கெ. ஒரு சேர்	ரூ. 4-0-0,	அரை சேர்	ரூ. 2-0-0.
கால் சேர்	ரூ. 1-0-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-8-0.
2-கெ. ஒரு சேர்	ரூ. 3-0-0,	அரை சேர்	ரூ. 1-8-0.
கால் சேர்	ரூ. 0-12-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-6-0.

T. A. ராமலிங்க முதலியார், ஷண்முகாநந்த வைத்தியசாலை.

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய் நாட்டு நண்பர்கள் கீழ்க்கண்ட எங்கள் கம்பெனிசோல் ஏஜண்டு அவர்களுக்கு எழுதி எல்லா விபரங்களும் தெரிந்து கொள்ளவும்.

S. S., F. M. S., J. B.,

மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வேள்ளாச்சாமி,

கெ. 616 டத்தோகிராமட் ரோடு, பிளுவ்கு. S. S.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India, Ltd., Bombay No. 10.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ்

மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (காவலூர்)

சி. சுவாமி சிவதேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

கெந்தகமே—இந்தியுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குத்தங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-விந்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முறிந்த சீழ்) வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, குஷ்ட, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவலைகள், தொண்டைத்தாரு, அண்டப்புத்து, பௌத்திரம், சுரசவாய்வு, உதிரவாய்வு, சுயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, டல் இதர்நியும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிசயிசனத்திலுலோ, அகால போஜனத்திலுலோ அன்னதுவே சமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததிலுலோ, தளர்ச்செய்துக் கொண்டதிலுலோ, சுரதம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊடுருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சந்து கட்டி என்பதற்கும் தாடையின் இரத்த நரம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இவை யின்னோ வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, தூரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய நோழன். உற்ற குனிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக் கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 7—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,

(கால்ராபைரி)

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

ஜயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0

வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0

வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—

மானேஜர், "குமரன்" காரைக்குடி

ராமநாதபுரம் ஜில்லா

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0

வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: கு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,

"நாடார்குல மித்திரன்"

அருப்புக்கோட்டை

ராமநாதபுரம் ஜில்லா.

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"

4 லல்லிதொலாந்தால் வீதி

புதுச்சேரி.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"

ஹண்டர்சன் பேட்டை P.O.

கோலார் தங்கவயல் (S. I.)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தீண்டாமையும் ராஜிபுரம் மகாநாடும்.

(கைவல்யம்)

வேதாந்த சாஸ்திரத்தில் அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம் முதலியவைகளுக்குப் பிறப்பிடமான மாயை எப்படி வந்தது? வருவானேன்? என்கிற கேள்விக்கு அதனை இன்னதென்று சொல்லமுடியாது என்றாலும் புத்திவிசாரமற்றதினால் மாயைவந்ததென்று சொல்லியிருக்கிறபடி தீண்டாமை என்பது என்ன? எப்படிவந்தது? வருவானேன்? என்கிற கேள்விகளுக்குத் தீண்டாமை இன்னதென்று சொல்ல முடியாவிட்டாலும் தன்னலத்தால் உண்டான குறுகியமனமே காரணம்.

அஞ்ஞானம் நீங்கினால் ஞானம் வந்து மாயையகித்துப் பரலோகத்தில் சுகமாய் வாழலாம். அதுபோலதன் னலத்தைப்போய் குறுகியமனம் விசாலப் பட்டு ஆருயிக்குணம் நிகழ்ந்துதீண் டாமை விலகினால் சுயராஜ்யமடைந்து இவ்வுலகத்தில்சுகமாகவாழலாம். மாயையை நீக்கிக்கொளளாதவர்களுக்கு மோட்சமில்லை என்கிறார்கள். தீண்டாமையை விட்டுவிடாதவர் கட்கு சுயராஜ்யமில்லை என்கிறார்கள். ஆனதால் மோட்சம் வேண்டியவர்கள் இவ்வுலக ஆசையைவிட்டு பரலோக ஆசையை மேற்கொண்டு அதற்கு வேண்டிய சித்த சுத்தியும், தூய்மையான இருதயமும் அடைவதற்குச் செல்லட்டும். காள்முழுவதும் உலக விஷயாதிகளில் தழுந்தியிருந்து விட்டு சாயங்காலத்தில் மூக்கை மூன்றுதரம் தொட்டுமுணுமுணுத்து விட்டால் ஆகாயத்திலிருந்து மோட்சம் வந்துவிடுமென்ற நினைத்துத் தீண்டாமை போவதற்கு விரோதமாகவிருக்க வேண்டாம். இவ்வுலக போகங்களை விரும்புகிறவர்கள் சுயராஜ்யமடையவேண்டுமானால் அதற்குத்தடையாக விருக்கும் தீண்டாமையைவிட்டுவிடட்டும்.

இப்பொழுது எல்லாப்பிரசங்க மேடைகளிலும் தீண்டாமையை விட்டுவிடவேண்டுமென்றும், தீண்டாதாருக்கு நாம் அனுபவிக்கும் உரிமைகள் கொடுக்கப்படவேண்டுமென்றும் சொல்லப்படுகின்றன. அதுபோலவே ராஜிபுரம் கொங்கு வேளாளர்கள் சபையில் தீண்டாமை போகவேண்டுமென்று கொங்குவேளாளப் பெரியவர்களால் பேசப்பட்டது.

அந்த சபைக்கு கொங்குவேளாளர்களின் சமூகச்சீர்திருத்தப்பெரியவரான கனம் பழயகோட்டைப்பட்டக்காரர் சபைத்தலைவராக இருந்தார். சேலம், கோயமுத்தூர்ஜில்லா கொங்குவேளாளப் பிரபுக்களும், முக்கியஸ்தர்களும் அந்த சபையிலிருந்தார்கள். தீண்டாமையை நீக்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தபடி அவர்கள் சொந்த குடும்ப விவகாரங்களில் தாமதப்பட்டாலும் பொதுஸ்தாபனங்களிலுள்ள தீண்டாமையை உடனே நீக்கவேண்டும்.

இப்பொழுது கோயமுத்தூர் ஜில்லா தலைஸ்தாபனங்களின் தலைவர்களும் முக்கியமானவர்களும் அவர்களேயாவார்கள். ஆதியிலுள்ள பள்ளிக்கூடம், கிணறு, சத்திரம், சாவடி, சேவகம் முதலியவைகளில் தீண்டாமை நீக்குவதற்கு அவர்கள் பேசினது போலவே செய்கைக்கும் கடமைக்கும் சக்தியுடையவர்களுமாவார்கள். எப்படியெனில்,

ஈரோடு தாலூகா போர்டுத்தலைவர் பழயகோட்டைப்பட்டக்காரர் அவர்கள், கோயமுத்தூர் தாலூகா போர்டுத்தலைவர் கனம்வெள்ளிபங்கிரிக்கவுண்டர் தம்பி திரு. பழனிசாமிக்கவுண்டர், சொக்கு வேளாள விவசாய மகாநாட்டுத்தலைவர் திரு. ராமசாமிக்கவுண்டர் மகன் திரு. சுப்பிரமணியக்கவுண்டர் கோபிசெட்டிபாளையம் தாலூகா போர்டுத்தலைவர் ஊத்துக்குளி ஜமீன்தார்பொள்ளாச்சிதாலூகா போர்டுத்தலைவராக இதுவரையிலுமிருந்தார். இப்பொழுதும் அவருடைய நிர்வாகத்திற்குடைய அவர் பந்துவே தாலூகா போர்டுத்தலைவர். திருப்பூர் தாலூகா போர்டுத்தலைவர் திரு. ராமசாமிக்கவுண்டரும், இவர்களுடைய பந்துவே. திரு. பட்டக்காரர், திரு வெள்ளிபங்கிரிக்கவுண்டர் திரு. ராமசாமிக்கவுண்டர், ஊத்துக்குளி இளைய ஜமீன்தார் நடராஜ காளியங்கராயக்கவுண்டர், மிட்டா டாக்டர். சுப்பிராயக்கவுண்டர், தம்பண்ணக்கவுண்டர் இன்னும் பல கவுண்டர்கள் தீண்டாமை நீக்கத்தைப்பற்றிப்பேசப்பட்ட சபையில் இருந்ததுமல்லாமல் கொடியேற்றினவர்களும், சபைத்தலைவர்களும், பிரசங்கம்புரிந்தவர்களுமாவார்கள்.

சபையென்பது சத்தியம் விளங்கக்கூடிய இடமென்றும், அந்த சத்தியமே தெய்வமாக விளங்குகிறதென்றும், சொல்லப்படுகின்றன. தேசம் அபிவிர்த்தியாவதற்கும், சமூகம் ஒற்றுமையடைவதற்கும் தடையாக இருப்பதில் முக்கியமானது தீண்டாமை, அந்த தீண்டாமை நீக்கப்படவேண்டுமென்றும், சத்தியம் அவர்கள் வாயினின்றே உதித்துவிட்டது. சத்தியத்திற்கும், உண்மைக்கும், உயிரையும், செல்வத்தையும், இவர்கள் பெரியவர்களில் பலர் இழந்து தங்கள் மேன்மைகளை நிலைநாட்டினார்களென்றும், பழய சரித்திரங்கள் சொல்லுவதையும் இவர்கள் அறிவார்கள். இவர்கள் சொன்னதை முடிக்கும் தைரியமும், சக்தியுமுடையவர்களென்பதில் சந்தேகமில்லை. இவர்களுடைய அன்பிற்கும், நினைவுக்கும், வார்த்தைக்கும் கொங்குநாடு மதிப்பளிக்கக்கூடியதுதான் என்பதும் மிகையாகாது.

ஒவ்வொருகாலத்திலும் மனுஷிய ஜாதி கற்றுக்கொள்ளும் பெரிய உண்மையாகிய செல்வம் உலகத்து நாடுகள் அனைத்திலும் யாதேனுமொரு ரூபத்தில் பரவுதல் இன்றியமையாதது என்றும், இந்த செல்வத்தைச் சுமப்போர் பரப்புதலிலே லோபம் காட்டுதல் தெய்வ நிந்தைக்கு விரோதமென்றும், நமக்கு இனிமையாகத் தோன்றிய சுதந்திரங்களைப் பிறர் அனுபவியாமல் தடுப்பதையும், சர்வ சாதாரணமாக வழங்கத்தக்க உரிமைகளுக்குச்சிறப்புரிமைகள் என்ற பெயர்சூட்டி மானுஷீகத்தை அவமானப்படுத்தி வந்ததையும் கொங்கு வேளாள சபையும், அதன் தலைவர்களும் உணர்ந்துகொண்டது தெனிவான யோசனையும் பெருந்தன்மையுடைய உள்ளமும்உடையவர்களாய்த் தர்மத்தின் உண்மைக்குலாயக்காய் நிற்பவர்களென்று சொன்னாலும் பொருந்தும், என்றாலும் அப்பெருமேலேலையும், அதனால் வரும் சவுகரியத்தையும், அதற்குள்ளிருந்துண்டாகும் என்றும் நீங்காத கீர்த்தியையும், அந்த கீர்த்தியாலுண்டாகும், தருமத்தையும், அந்த தருமத்தாலுண்டாகும் புண்ணியத்தையும், அந்த புண்ணியத்தாலுண்டாகும் தெய்வ கிருபையையும், அந்த கிருபையாலுண்டாகும் மோட்சத்தையும் அடையும் பாக்கியம் அந்த சபையிலிருந்த எந்த பாக்கியவான்களுக்குக்கிடைக்குமோ நாமறியோம். தன்னேலேலையைவிட்டு தன்னலம்மறுத்துத்தாழ்ந்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், அறிவின்மையாலும், அநீதிக்கொடுமையாலும் வீழ்த்தப்பட்டவர்கள் இவர்களுக்காகப்பரிதாபப்பட்டு அவர்களுக்குதவுவதே எல்லாரைக்காட்டிலும் சிலாக்கியமென்று நினைத்து திடம்படநின்று தீரனும் சபையின் தீர்மானத்தை யார் நிலைநிறுத்த முயற்சிக்கிறார்களோ அவர்களிடமே அப்புண்ணியம் புகுந்துகொள்ளும். அந்தப்புண்ணியம் கொங்கு வேளாளத் தலைவர்கள் யாரிடம் போகுமோ? யார்பாத்திரமாவார்களோ? யார் எல்லாராலும் கொண்டாடப்படுவார்களோ? அதையும் காமறியோம்.

கொங்கு நாட்டுப் பூர்வீகத்தமிழர்களே நமக்குள்ளேயில்லைச்சண்டை, அற்பபகை அற்பப்பொறாமை அதற்காக ஆயிரக்கணக்கான பணச்செலவு, அதேகர் தயவு, பலஹீன வீணாசல் முதலியவைகளுக்கெல்லாம் இது வன்றுசாலம், மனுஷிய ஜாதி எப்போதும் முன்னே நோக்கிச்செல்லுகின்றது. அந்த திருவிழாவில் தெய்வம் உங்களோடும் கூப்பிடுகிறார். சிறிது பணக்காரரைக்கண்டால் பல்லைக்காட்டும் பூசாரி தடுப்பதற்கும் இடம் கொடுக்காமல் காலசக்தியின் தூண்டுதலால் நீங்களும் அதில் கலந்தது என்றுயிற்று. இனி உங்களுடைய உத்தம அபிசங்கள் ஜோதி பெற்றுத்திகழும், சில நூற்றாண்டாக உங்களோடுபற்றிக்கொண்ட இருள் மூலைவிட்டோடிப்போகும். உங்களுடைய ஆண்மையை உசுப்பிப்பழக்கிட மாக்கிய குரூரமான சாதி ஆசாரங்களினின்றும் பரம்பர அன்பினால் விடுபட்டு எல்லாருடனும் தோன்கோர்த்து நிற்பீர்களென்று ராஜிபுரம் மகாநாடு சொல்லுகின்றது. நம்மவரை நாமே இகழ்ந்து, அவர்களிடம் தன்மைபிறப்பதைநாம் தடுத்து அவர் களே உலகம் இகழவைத்தல் நியாயத்திற்கு விரோதமென்பதற்கு ராஜிபுரம் மகாநாட்டில் டாக்டர். சுப்பராயன் அவர்கள் பேச்சே சாட்சியாக விருக்கிறது.

ராஜிபுரம் மகாநாட்டில் சில சீர்திருத்தங்களும், நிச்சயமும் பேசப்பட்டதாகத்தெரிகிறது. அவர்களால் விடப்பட்ட ஒன்றிரண்டு விஷயங்களை நான்பெரியவர்களுக்கேத்தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். எனெனில் அதை அவர்களே முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

கொங்குவேளாளர்களின் கலியாணத்தில் அவர்கள் ஜாதியாராகிய அருமைக்காரர் என்பவராய் கலியாணச்சடங்கு முடிப்பதுதான் அநேகமாக இன்றும் வழக்கம். அதில் சில பணக்காரர்கள் பார்ப்பாரப்புரோகிதர்களைச்சேர்த்துக்கொண்டார்கள். அதைப்பின்பற்றி சிலரும் அதன் வழியே சென்றுகொண்டிருக்கிறார்கள். அதுவுமல்லாமல் கலியாணத்தில் பார்ப்பாருக்குக்கால் ரூபாயிலிருந்து ஐந்து, பத்து ரூபாய் வரையிலும் நிலைமைக்குத்தக்கபடி தெட்சணையும் கொடுக்கப்படுகின்றன. இவர்கள் கலியாணத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் உழைப்பே முக்கியமானது. பயறுகொட்டுவதும், வீதி கூட்டுவதும், பந்தலுக்கு வேண்டிய சாமான் சுமப்பதும், விளக்குவெட்டுவதும், அவருக்கும் எவ்வளவு ரூபாய் மாமூலாக தட்சணை கொடுத்தனுப்புவதும், மாப்பிள்ளை பெண்வீட்டிற்குத்தாலி கட்ட வருவதில் இருபது முப்பது மைலானாலும், மாப்பிள்ளையின் வண்டிக்கு முன்னும் ஓடி வழியில் கண்ட ஊரெல்லாம் கொம்பூதி மாப்பிள்ளை யின் வரவைத்தெரியப்படுத்தி பெண் வீட்டாருக்கும் தெரியப்படுத்துவார்கள். பெண்வீட்டிலிருந்து தம்பதிகளை அழைத்துக்கொண்டு வருவதையும் வண்டிக்கு முன்னும் ஓடி பார்க்கும் ஊருக்கெல்லாம் பறையடித்து வரவைத்தெரியப்படுத்தி மாப்பிள்ளை வீட்டாருக்கும் வரவைத்தெரியப்படுத்துவார்கள். இதற்குள் காலும் செத்து, கையும் ஓய்ந்து, வாயும் வலித்து, காவும் வாங்கி, போஜனம் கும்பிட்டில் புஜமும் வீங்கித் தண்ணியுங்கிலாமல் பனியும், வெய்யலும், மழையும் பஞ்சணையாகப்படுத்த தூக்கமில்லாமல், உட்காரவழியில்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
சி தூலக அறக்கட்டளை

ஹிந்துக்களின் மத புஸ்தகங்கள்.

(Dr. R. P. பரஞ்பியே எழுதிய "இந்தியாவின்) தேவை" என்னும் புத்தகத்தில் காணப்படும் சாரங்கள்.

[முன்தொடர்ச்சி]

முற்கூறிய புராணங்களும், இதிகாசங்களும் தான் ஹிந்து மதத்தில் அறிவு வளர்ச்சிக்கான மூலாதார புஸ்தகங்களென சாதாரண பாமர மக்களால் பெரும்பாலும் கருதப்பட்டு வருகின்றது. அது எப்படியிருந்த போதிலும், ஒவ்வொருதையிலும் கண்டனங்களுக்குட்படாத சொற்பொருள்களுள்ள சில உண்மைகள் பொதிந்தேதான் விளங்குகின்றன. மேலும், கற்பனா சக்தியினுதவியிலால் எழுதப்பட்ட கதைகள் யாவும், பெரும்பாலும் உண்மையில் நடந்தவாறே அவ்வளவு அழகாக வர்ணித்துக் கூறப்பட்டுமிருக்கின்றன. சில புராணங்களோ, அளவுகடந்த, பெரும் பொய்களேயே ஆதாரமாகக் கொண்டுள்ளன. கிறிஸ்துவர்களின் சத்திய வேதமாகிய பைபிளில் காணப்படும் சில கதைகள் எவ்வாறு குழந்தைகளால்கற்பதற்குத்தகுதியற்றவை யெனக் கருதப்படுகின்றதோ, அவ்வாறே தான் இப்புஸ்தகங்களில் காணப்படும் சில கதைகளும் குழந்தைகளால் கற்பதற்குத்தகுதியற்றவையாகும். இன்னும் சில கதைகளோ, எதாகிலும் குறித்த ஓர் ஜாதியையோ, அல்லது வகுப்பையோ அளவுகடந்தும், வெளிப்படையாகவும் தோத்திரம் செய்து, புகழ்ந்து பாராட்டுவதோடும் கூட, வேறய இதர ஜாதிகளையும், வகுப்புகளையும் பழித்துத் தூற்றவதிலும் சிறந்து விளங்குகின்றன. இக்காரணத்தாலேயேதான், பிராமணரல்லாத வேறய சமூகத்தார்கள் சில புராணங்களின் மீது தப்பெண்ணங்கொள்ளவும், அவைகள் பொய்யென்றெண்ணவும் இடமேற்படுகின்றது.

ஹிந்துக்களாய்பிறக்க விசேடமென பயபக்தியுடன் கருதப்படும் புஸ்தகங்களிலெல்லாம் தலை சிறந்து, முதன்மையாக விளங்கக்கூடியவைகள் பகவத்கீதையும், உபநிஷத்துக்களுமேயாகும். இவைகள் பெரும்பாலும் தத்துவ சாஸ்திரத்திற்குரியவைகளேயே போதிக்கின்றன. தங்களுடைய நித்திய, நைசரி வாழ்க்கையில் கீதையின் ஓர் அத்தியாயத்தைத்தினந்தோறும் தவறாமல் வாசித்துக்கொண்டே தான்வரவேண்டுமென்பதுவல்லாதொருவருடையஅத்தியந்தகடமையெனவும், அதுவே ஒரு புண்ணியமெனவும் ஹிந்துக்களிலனேகர் கருதி அவ்வாறே நடந்து கொண்டு வருகின்றார்கள். அவைகளைப்பற்றி நாம் இங்கே விளக்கமாக உரைப்பதென்றால், அது முடியாத காரியமேயாகும். ஆகையால் ஒவ்வொரு தனிவாளியும், ஆராய்ச்சிக்காரரும் தங்கள் தங்களுடைய பகுத்தறிவினுதவியைக் கொண்டு அவைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நாம் பெரிதும் விரும்புகின்றோம். கீதை போதிப்பதின் மூக்கியாம்சத்தைக்குறித்துப் பல அபிப்பிராய பேதங்களிருந்து கொண்டுதான் வருகின்றன. அதாவது, கீதையானதுகர்மத்தைப்பற்றித்தான் போதிக்கின்றதென சிலரும், பக்தியைப்பற்றித்தான் உபதேசிக்கின்றதென சிலரும் கூறிக்கொண்டு வருகின்றார்கள். மேலும் அரசியல் வாதிகளிலநேகர், பெரும்பாலும் கீதையில் காணப்படும் சுலோகங்களையே பிரமாணமாகவும், மேற்கோளாகவும் அடிக்கடி எடுத்துக்காட்டி வழக்க முடையவர்களாயிருக்கின்றனர். ஆனால், உண்மையாகவே கீதையில் அங்குமிங்குமாகக்காணப்படும் சுலோகங்களைப் பெரும்பாலும் நாம் எத்தகைய காரியங்களுக்கும் எக்காலத்திலும் பிரமாணமாகவும், மேற்கோளாகவும் எடுத்துக்கூறலாம்.

நாம் இதுவரையிலும் கூறிக்கொண்டு வந்த, வடமொழியில் எழுதியிருக்கப்பட்ட சிறந்தவைகளைத் தவிர்த்து, ஒவ்வொரு வகுப்பினருடைய தாய்ப் பாஷையிலும் ஏராளமான மதசம்பந்தமான புஸ்தகங்கள் காணப்படுகின்றன. இப்புஸ்தகங்கள் யாவும், பெரும்பாலும், பயபக்தியுடனும், ஆசார அனுஷ்டானங்களுடனும் தான் ஓதப்பட்டும், போதிக்கப்பட்டும் வருகின்றன. தற்காரணம் அவர்களால் இயற்றப்பட்ட "அபீஹல்காஸ்" எனக் கூறப்படும் மத சம்பந்தமான மந்திரங்கள் நாளையும் மகராஷ்ர தேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களால் ஓதப்பட்டேதான் வரப்படுகின்றது. பல்வேறு ரிஷிகளின் ஜீவிய வாழ்க்கையானது, பொதுவாகவே, மக்களுக்கு ஓர் தூண்டு கோலாக இருந்து கொண்டு வருகின்றது. மேலும், அவர்களுடைய வாழ்க்கையில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு சம்பவங்களையும், படித்த அறிவாளிகளென்பவர்கள் கூடயாதொருவித கண்டனமோ, ஆக்ஷேபனையோயின்றி, அப்படியே அவைகளை நம்பிக்கொண்டு வருவதுடன், அவர்களைக்குறித்துக்கூறப்படும் அதி அற்புதமான, இயற்கைக்கு மீறிய கதைகளையும் ஆக்ஷேபனையின்றி உண்மையென்றே நம்பிக்கொள்ளுகிறார்கள். அக்கதைகளில் கூறப்பட்டிருக்கும் சன்மார்க்க போதனையானது, ஆச்சரியப்படத்தக்க விதமாகத்தான் அமைக்கப்பட்டு, கூறப்பட்டிருக்கின்றதென்பதில் சிறிதும் சந்தேகமேயில்லை. ஆனால் சமயா சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தவாறு ஒருவன் தன்னேத்திருத்திக்கொள்ளாமலும், எதிர்த்துப்போராடாமலும், என்ன நேரிடினும் அப்படியே அவைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டுமெனவும், விதியை வெல்ல ஒருவராலும் முடியாதெனவும், தாங்கள் கும்பிடும் குறித்த ஓர் தெய்வம் தங்களுடைய நித்திய வாழ்க்கையில் எதாகிலும் துன்பம் நேர்ந்தால், உடனே குறுக்கிட்டு தங்களைப் பாதுகாக்குமெனவும் அழுத்தந்திருத்தமாகவும், வற்புறுத்தியும் கூறப்பட்டிருக்கின்றது அதனால் தான், இந்தியாவின் பெரும்பான்மையான மக்களை விதிக்குக் கட்டுப்பட்டுத்தான் தீரவேண்டுமென்கிற மனப்பான்மையுடன் இருக்கும்படி செய்வதுடன், தங்களுடைய சுயமுயற்சியால் எதாகிலும் ஓர் காரியத்தை வெற்றிகரமாக முடித்து, மூற்போக்கடைவதற்கு, அல்லது முன்னேறுவதற்கு சாத்தியமில்லாதவர்களாகவும், அதாவது சோழைகளாகவும் செய்து விட்டது. மேலும், குறிப்பாக, தற்கால சமூக வாழ்க்கையைக் குறித்த வரையிலும் நாம் நமது முன்னோர்களாகிய ரிஷிகளின் வாழ்க்கையைக் குறித்துப் பேசி, இவ்வுலக வாழ்க்கை அசித்தியமானதென கூறிக்கொண்டிருப்பதானது சிறிதும் பொருந்தாக்கூற்றேயாகும்.

விவேகிகளான பகுத்தறிவாளர்கள் இந்நூல்களில் நன்மையை விளைவிக்கத்தக்க பாகங்களை அப்படியே பாதுகாத்து, அவைகளை ஆராய்ச்சிசெய்து, குணங்களை மட்டும் கிரகித்துக்கொண்டு மற்றபடியான மார்க்கங்களைக் கண்டனம் செய்ய முயற்சி செய்யவேண்டும். இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒவ்வொருவருடைய மனதிலும் ஆழமாகப்பதிய வைக்க வேண்டுமென விரும்புவது யாதெனில், நாம் வெற்றிவீரர்களாக விளங்காமல், இந்த நூல்களை ஆராய்ச்சி செய்யும் பொழுது, நமது பகுத்தறிவை உபயோகிக்க வேண்டுமென்பதேயாம்.

நாம் இதுவரையிலும் ஹிந்துக்களின் மத சம்பந்தமான புஸ்தகங்களைப்பற்றி சுருக்கமாகக் கூறிக்கொண்டு வந்ததிலிருந்து, இந்தியாவிலிருக்கும் பகுத்தறிவாளர்களின் குண தோஷ விசாரணைக்குரிய வேலையானது சிறிய்ஸ்துவர் தேசங்களில் வசிக்கும் பகுத்தறிவாளர்களின் வேலையைப்போல் அவ்வளவு கடினமானதாயும், கஷ்டமானதாயுமிராதெனப் புலப்படும். அவர்களுடைய முக்கிய வேலையானது என்னவெனில் அவர்களுடைய ஆக்ஷேபனைகளையும், கண்டனங்களையும், செய்கைகளில் காண்பித்து, அனுஷ்டானத்தில் கொண்டுவர மக்களுக்குப்போதிய இடத்தையும், அதாரியத்தையும் ஆகாவையும் அளிக்கவேண்டியதேதான். இந்திய சீர்திருத்தவாதிகளிற்சிலர், எதாவது குறித்த ஓர் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால், ஆதிகாலத்திய மத புஸ்தகங்களின் மீதுதான் தங்களுடைய முழுப்பொறுப்பையும் சுமத்தக்கூடிய மனப்பான்மை வாய்ந்தவர்களாகவே காணப்படுகின்றார்கள். ஏனெனில், "வேதங்களுக்குத் திரும்புங்கள்" என்னும் கோஷ்டம் நமது செவிகளில் அடிக்கடி விழுகின்றது. இவர்கள் இம்மாதிரியாகக் கூறி மக்களைத் திருப்புவதானது சில விஷயங்களில் எதாவது நன்மையையே விளைவிக்கக்கூடியதாக விருந்தபோதிலும் கூட, அம்மதபுஸ்தகங்களில் காணப்படும் சுலோகங்கள் எத்தகைய சொன்னையையும் ஆதரிப்பதற்காக வேண்டி, எதற்கும் மேற்கோள்களாகவும், பிரமாணங்களாகவும் எடுத்துக் காண்பிக்கமுடியுமென்பதையும் நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். பொதுவாகவே, நாம் எக்காரியத்தில் பிரவேசித்தாலும் நமது அறிவையே நாம் பிரதானமாகக் கொண்டு, அதன் வழியே செல்லவேண்டுமேயல்லாது நமது பாண்டித்தியத்தினுலேற்பட்ட யுக்தி, சமத்காரம், தந்திரம் ஆகிய வைகளின் சழலில் அகப்பட்டுத்தத்தளிக்கக்கூடாது. நாம் எதாகிலும் ஓர் சீர்திருத்தம் வழங்கவேண்டி நேரிட்டால், அச்சீர்திருத்தம் மக்களால் அடையக்கூடிய வழியே நமக்குச் சீர்திருத்தத்தைவிட பதின்மடங்குப் பிரதானமானது. அவ்வாறிலையாகில், அச்சீர்திருத்தத்தினுலேற்படும்மாறுதலானது நாம் ஒரு அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு, மற்றொரு அடிமைத்தனத்திற் காலாகியதையே யொக்கும்.

மத புஸ்தகங்களெனக் கூறப்படுபவைகளில் பெரும்பான்மையான புஸ்தகங்கள் படிப்பதற்கு மிக்க சந்தோஷமுள்ளவைகளாகவும், அழகானவைகளாகவுமே விளங்குகின்றன. மேலும், இந்தியாவின் ஆதிகாலத்திய நாகரீகம் எத்தகைய நிலைமையிலிருந்ததென்பதைப்பற்றி நமக்கு நேரிடையாக எடுத்துக்காண்பிப்பதற்கு வேறு ஒருவித ஆதாரங்களுமில்லாமலிருப்பதினுல், நாம் நமது பழைய நாகரீகத்தை ஒருவாறு நிர்ணயிப்பதற்கு இம்மதபுஸ்தகங்களில் நமக்கு வேண்டிய அநேக ஆதாரங்கள் காணப்படுகின்றன. எண்ணிக்கையற்ற பரம்பரைகளின் அனுபோகங்களையும், எண்ணங்களையும், கொள்கைகளையும், தத்துவங்களையும் அவைகள் தங்களுக்குள்ளாக அடக்கிக்கொண்டிருப்பதுமல்லாமல், முற்காலத்திலிருந்த பெரியார்களின் உயர்ந்த கருத்துகளையும் அவைகள் பிரதிஷ்டை செய்கின்றன. ஆதிகாலத்திய இக்களஞ்சியத்தை மக்கள் கற்று, நேரான வழிகளில் நடந்து கொள்ளுவதைப்பற்றி நாம் குறைகூற விரும்பவில்லை. ஆனால், விவேகமும், ஆராய்ச்சியுமின்றி மூடபக்தியுடனும்,

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

God and the Universe.

கடவுளும் பிரபஞ்சமும்.

கடவுள் செய்யும் வேலை என்ன?

(தோழர். ம. சிங்காரவேலு B. A., B. L.)

IV.

முன் கட்டுரைகளில் கடவுள் ஒருவர் இருந்தால், அவர் நம்முடைய பிரபஞ்சத்தில் உளதா? என விசாரித்தோம். நமக்குத் தெரிந்தவரையில் பிரபஞ்சத்தில் கடவுளுக்கு இடமிருப்பதாக ஏற்படவில்லை. கடவுளின் லட்சணங்கள் நமக்கு விளங்குகின்றதா? என்பதை விசாரித்தோம். இதுவும் நமக்குத்திருப்திகரமாக எதுவும் விளங்கவில்லை. பிறகு பக்தர்களும், சமயவாதிகளும், தத்துவநூல் ஆசிரியர்களும் தங்கள் குழந்தைப் பருவத்தில் கேட்டுவந்த சொல்லாகிய "கடவுளை" இன்னதென்றுபாருள் தெரியாமலே நம்பி வருகின்றனர் எனவும் காண்பித்தோம். கடவுள் என்ற பதத்தின் ஆதாரத்தையும் சுருக்கமாகக்குறிப்பிட்டோம். இனி, கடவுள் என்ற ஒருவர் இருப்பாரா யின், அவரது வேலை என்பதைச் சற்றுவிசாரிப்பாம்.

கடவுள், அல்லது கடவுளர் வேலை என்ன? புராணங்களில் கடவுள் சிவனுடையோ, விஷ்ணு வாகவோ அவதரித்துச்சிற்சிலசித் தியங்களைச் செய்ததாகச் சொல்லப்படுகின்றது. இதை அறிஞர் உலகம் நம்புவதற்கு இடமில்லை. சிவன், பிரமன், விஷ்ணு செய்ததாகச் சொல்லுங்காரியங்கள் தற்கால மனிதருக்கு அருவருப்பைத் தரத்தக்கவை என்றே மதிக்கவேண்டும். சில மதங்களில் கடவுளுடைய அருள் பெற்ற சில மனிதர்கள் அபூர்வச் செய்கைகள் செய்ததாகச் சொல்வதும் உண்டு. கிருஸ்துவ ஆகமத்திலும், மகம்மதிய ஆகமத்திலும் கிருஸ்தும், மகம்மதும் கடவுளருள் பெற்றவர்களென்று சொல்லப்படுகின்றது. ஆனால் மற்றமனிதர்கள் செய்து வரும் வேலைகளைவிட இவர்கள் செய்ததாகச் சொல்லப்படும் காரியங்கள் விசேஷமாகத் தோன்றவில்லை. அந்தக் காலங்களில் தோன்றிய எசுவும், மகம்மதும், சிவன், விஷ்ணு, பிரமனும் தூக்கம் நிரைந்த நமது காலத்தில் தோன்றலாகாதா? அந்தக்காலத்தில் இருந்த அவசரம் இக்காலத்தில் இல்லையா? புண்ணிய காலத்தில் தோன்றிய கடவுளரும், தீர்க்கதரிசிகளும், பாபம் நிரைந்துள்ள நமது உலகில் என் தோன்றலாகாது? இதற்கு விடையாதெனில், அந்தக்காலங்களில் கடவுளர் உலகில் அவதரித்ததாகச் சொல்லும் கதைகளும், அவர்கள் செய்ததாகச்சொல்லும் கிரந்தியங்களும் பொய் என்பதற்குச் சந்தேகமில்லை. மூடநம்பிக்கைகாலங்களில்தான் கடவுளர் திருவிளையாடல் யாவும் எழுதப்படுகின்றன. விசாரணை மேலிட்டகாலங்களில்எந்தக்கந்தபுராணங்களும் வெளிவர அச்சப்படும். பாமரஜனங்கள்கூட பழைய புராணக்கதைகளை நம்பினாலும், நமது காலங்களில் புதிய புராணங்கள் எழுதப்படுமேயாகில் அவர்கள் நகைப்புக்கு இடமுண்டாகும். இது புராணிகர்களுக்கு நன்றாகத்தெரியும். இதுசமயமாகவே புதிய கந்தபுராணங்கள் எழுத அச்சப்படுகின்றார்கள். திருவிளையாடல் முதலிய புராணங்கள் யாவும் பார்வி கதையைப்போன்றனவும், அராபிக் கதைகளைப் போன்றனவும், பஞ்சதந்திரக் கதைகளைப்போன்றனவுமானஸாகித்தியங்கள், அதாவது இலக்கியங்கள் என அறியவேண்டும். இவைகள் கூறும் விஷயங்கள் உண்மை என யாருங்கருதார். ஆனால் இவை கூறுங்கூற்றினை நமது காட்டில்தான் மதவிஷயமாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன: இது மிகவும் வருந்தத்தக்கதே. பாமரஜனங்கள் தங்கள் பருத்தரிவை உபயோகிக்கும் பட்சத்தில் புராணங்களின் ஆபாசங்கள் வெள்ளென விளங்கும். இதனை எடுத்துக்காட்டி, பலகோடி மனிதரை மூடபக்தியினின்று மீட்க வேண்டியகடமை அறிஞருடையதே. இதனைஎதிர்பார்ப்பதை சாஸ்திகர்களென்றும், கடவுள் இல்லாப்பாவிகளென்றும் கூறுவதில் பிரயோஜனமில்லை. சொல்வதில் ஞாயமுளதா என விசாரித்தல் வேண்டும். இதுதான் உத்தமருக்கழகு. புராணங்கள் கூறும் கடவுளுடைய திருவிளையாடல்கள் யாவும் கழைக்கூத்தைப் போன்றவைகளென்றால், கடவுளுக்கு என்ன தான்வேலை? சிருஷ்டி என்பார்கள் பக்தர்கள். அவர்களில் சைவர்கள் சொல்வதாவது, ஆன்மாவாம்! வேதாந்திகளுக்குக் கூவுவதால் மனிதனும், மற்றுமுள்ளசீவர்களும் சிருஷ்டிக்கப் பட்டதாகச் சைவர் சொல்வது உடன்பாடில்லை. வேதாந்திகள் பிரமத்திலிருந்து உலகமும், உயிரும் பரிணமித்தன வென்பார்—பரிணமித்தல் என்றால் ஒன்றிலிருந்து ஒன்று இயற்கையாகவே மாறுதல் ஆதலின், இயற்கையாகவே மாறும் பொருள்களுக்குக் கடவுள் உதவி ஏன் வேண்டும்? இத்தியாதி சிருஷ்டிக்கதைகளிலிருந்து கடவுளுடைய பக்தர்களுக்கே கடவுள் இன்ன வேலைசெய்கின்றார் என்று திட்டமாகச் சொல்லமுடியவில்லை என்றே ஏற்படுகின்றது. இவ்விதமான சிருஷ்டிக்கதைகளுக்கு ஆணிவேர் குவழக்கில்லை. ஒரு மதஸ்தர் சொல்லும் கதை மற்றோர் மதஸ்தர் சொல்லும் கதைக்குப்பொருத்தமோ, சம்பந்தமோ கிடையாது. ஒருமதஸ்தர் முட்டையிலிருந்துவந்ததுலகமும்,உயிரும் என்பார்; வேறோரு மதஸ்தர் பிரமன் தலையிலிருந்தும், முகத்திலிருந்தும், வயற்றிலிருந்தும், கால்களிலிருந்தும் நான்கு வருணத்தார்களாகிய பிராமண, க்ஷத்திரிய, வைசிய, "சூத்திரர்கள்" பிறந்ததாகச் சொல்கின்றார்கள். "எதாபக்தா ததாதேவா" அதாவது பக்தன் எப்படியோ, அப்படியே கடவுளும் என்ற வாக்கியப்படி அந்தந்த பக்தனுக்குத் தோன்றியவாறு, கடவுளுடைய வேலையைக் கற்பிக்கிறார்களேயொழிய கண்டதாகயாரும்சொல்லவில்லை. கடவுளும், கடவுள் செய்ததாகச் சொல்லும் கிரந்தியங்களும், காவிய கற்பனைகளென்று காட்ட Poetic Creation சிலசிருஷ்டிக் கதைகளை இங்கு உதாரணமாகக் காட்டுவாம்,

உத்தி இந்தியர் [Ute Indians] சொல்லும் கதை விந்தை மானதாகஇருக்கும். பூமி ஒருகாலத்தில் முடு பனியால் மூடப்பட்டிருந்தது. பெரிய ஆவி, அதாவது கடவுள் தன்னுடைய அம்புயில்லால் அவைகளைப்பிரித்தார். களிமண்ணை எடுத்து மனிதஉருவமாக்கி அனலில்வேகவைத்தார்; சுடுகை போதாமையால் மண் மனிதன் வெளுப்பாய் வந்தான். அதிக சூட்டினால் கருப்பாய் வந்தான். அனலும், குளிர்ச்சியும் சேர்ந்து மிதத்தில்வேகவைத்த மண்மனிதன் சிகப்பாய்வந்தானும். அவன்தான் மனிதருக்குள் உத்தம புருஷனும். அமெரிக்கா தேசத்து இந்தியர் சிகப்

தொடர்ச்சி 15ம பக்கம பார்க்க.

சிவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?

(தோழர். அ. இராகவன்.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பதியிலார்:—குறிப்பிட்ட எனைவனின்றி கண்டவருடனெல்லாம் காமவெறிகொண்டும், பொருளாசையாலும், ஏனைய ஆசையாலும் புணர்ந்து வாழும் பெண்களையே பதியிலார் என்று ஈண்டு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களை வேசிகள், தாசிகள், தேவடியாள்கள், பொதுமகளிர்கள், வரைவின்மகளிர், கணிகையர், பரத்தையர் எனப்பலப்பல பெயர்களால் அழைக்கப்பட்டுவருகின்றது. இக்கூட்டம் உலகின் பலவிடங்களிலும் இருந்துவருகின்றது என்றாலும் இந்தியாவைப்போல் சரித்திரகாலத்திற்கு முற்பட்டே உலகின் ஏனையவிடங்களில் இருந்துவந்ததாகத்தெரியவில்லை. மேலும் உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் விபசாரிகளின் தொகைகளைக்குறைக்க அந்நாட்டறிஞர்கள் நுணுகி ஆராய்ந்து சிலதிட்டங்கள் அமைத்து அவைகளை அனுஷ்டித்துப்பார்த்ததில் வெற்றி கண்டுள்ளார்கள். எடுத்துக்காட்டாக சமதர்மஆட்சியெனிரும் ரஷியதேசத்திலே புரட்சி ஏடைபெறுவதற்கு முன் மாஸ்கோ நகரில் (மட்டும்) 1,8000,00 ஜனங்கள் வசித்துவந்தனர். இவர்களின் 20000 பேர்கள் பதிவுசெய்யப்பட்டவிபசாரிகள் 1928 வருஷத்தில் ரஷியாவில் 2,500,000 பேர்கள் வசித்துவந்தனர். அப்பொழுது 3000 விபசாரிகளே இருந்தனர். இடைபொழுது மாஸ்கோ நகரில் 500 விபசாரிகளே இருக்கின்றனர். 1928வது வருஷத்திலிருந்து விபசாரிகளின் தொகை குறைந்திருப்பதற்குக்காரணம் காட்டில் வேலையில்லாத் திண்டாட்டமின்றி யிருப்பதும் கலைவளர்ச்சிக்கு எற்ற சந்தர்ப்பமிருப்பதுமே. இன்னும் ஒரு வருஷத்தில் மாஸ்கோ நகரில் விபசாரிகளே இல்லாதுபோய்விடுவார்கள் என்று மான்செஸ்டர்கார்டின் என்னும் ஆங்கில வாரப்பத்திரிகை வெளியிட்டஓர்கட்டுரையை சண்டமாருதம் போன்ற பத்திரிகைகள் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பதை நேயர்கள் அறிந்திருப்பர். நாஸ்திகம் பரவும் ரஷியதேசத்து அறிஞர்கள் விபசாரத்தை ஒழித்து வருகின்றார்கள். ஆஸ்திகம் அளவுக்குமிஞ்சித்தாண்டவமாடும் இந்தியாவின் இந்து சைவமதக்கள் விபசாரிகளுக்கு ஆதரவுகாட்டுகின்றன. ஆண்டுகள்தோறும் விபசாரிகள் தொகை பெருகிக்கொண்டே வருகின்றது. சமயமும் அதிஞர்களும் விபசாரத்தை ஒழிக்க முன்வரும் சீர்திருத்தவாதிகளுக்கு எதிராகஇருந்துவேண்டும் இன்னல்கள் புரியத்தூண்டிவருகிறார்கள்.

மற்றையாட்டில் விபசாரிகள் பெருப்பலவித காரணங்களிருக்கலாம். இந்தியாவிலோவென்றால் இளமை மணம், விதவைமணம்மறுத்தல், பெண்டிர்கள் பொருந்தா நாயகனைப்பெற்றோர்விருப்பப்படி கட்டாயமாய் மணம்புரிதல், பெண்களுக்கு சொத்துரிமைமறுத்தல், கடவுளின்பெயரால் பெண்டிர்கள் பொட்டுக்கட்டுதல், பிறப்பையொட்டி சாதிவகுக்கப்பட்டதுபோல் இவ்விழிதொழில்புரிந்தோர் மக்களையும் ஒருசாதியாய் சிருஷ்டித்த மக்களின் பெருங்குற்றங்களும் முக்கியகாரணங்களாய் விளங்கின்றன. இளைமைமணத்தால் கணவனுடன் வெறுப்புற்றோரும், சிறுவயதில் கணவனை இழந்து கைம்மையடைந்தமகளிரும் பெரும்பாலும் விபசாரிகளாய்ப்போகின்றனர். விதவையான பெண்களில்பலர் தம்மும்தோன்றும் இயற்கையுணர்ச்சியை அடக்கமூடியாதவராகி பக்கத்துவீட்டு பையனுடனே அன்றி தன்வீட்டு வேலைக்காரனுடனோ சோரத்தனமாய்புணர்ந்து கருவுற்று, கருவுற்றதை இரகசியமாய் சிதைக்க முயன்றும், பயன்படாமல் ஊரைவிட்டோடி பட்டினங்களில் போய் குழந்தையைப்பெற்று அதை ஆச்சிரமங்களில் கொடுத்துவிட்டு பகிரங்கமாய் விபசாரத்தொழிலில்பிரவேசித்து விடுகின்றனர். பெண்டிர்கள் ஒருபுருடனைக்காதலித்திருக்க குலம், பணம், அந்தஸ்து முதலியவைகளை விரும்பி பெற்றோர் மகளின் விருப்பிற்குமாறாக ஒருவனுக்குமணஞ்செய்து கொடுக்க அப்பெண் அப்புருஷன்மேல் அன்பற்றவளாகி களகம்பலவிழைத்து தாம் இளமையில் காதலித்தபுருஷனோடு சேரத்தனமாய் கூடலும், சம்மதல்லாமல் கணவன் பல்லிழந்த கணவனுய் வாய்த்ததுகண்டு வேறுதமக்கொத்த வாலிபனோடு கலத்தலும் அதைஜனங்களறிந்து தூற்ற அப்பெண்கள் ஓடிவேறு ஊர்களுக்குப்போய் பிழைக்கவழியற்று விபசாரம்புரிதலுமுண்டு. சிலபெண்களுக்கு தகப்பன் சொத்திலும், கணவன் சொத்திலும் உரிமையில்லாததால் பிழைக்கவழியற்று விபசாரம் செய்துவயிற்றுப்பிழைப்பைடத்தலும் உண்டு. ஒரு சாதியாரைமதத்தின் பேரால் கடவுளுக்கு மணவியாக்கி பின்னர்புரோகிதனும், அதன்பிறகு ஏனையோரும் புணர்ந்துகொள்ளலாம் எனச்செய்து பொருள் சம்பாதிக்கும் ஒரு கூட்டமும் நம் நாட்டிலே, நம் சமயத்திலே உண்டு. ஆனால் இவைகள் எல்லாம் நம்சமயத்தின் சார்பாக உண்டாக்கப்பட்டிருப்பினும் கலடையாய் கூறியபொட்டுக்கட்டும் வழக்கம் அல்லது விபசாரம் செய்ய லைசென்ஸ் கொடுத்தல் என்னும் கொடுஞ்செயலே சமயத்துடன் நேரடியாகச்சம்மந்தம் கொண்டது என்று சைவசமயத்தலைவர்களே ஒத்துக்கொள்கின்றார்கள்.

ஒருகாலத்திலே விவாகத்தில் விருப்பமில்லாதபெண்களும், இளமையில் விதவையான பெண்களும், திருமணவாழ்விற்கு உரியரல்லாத மகளிரும் கோயில்களில் சென்று ஆண்டவனழுதல், பூக்கொய்தல், கோலமிடல் முதலிய பல்வேறுதொண்டுகள் செய்துவந்தனர் என்பது பண்டைக்காலத்து நூற்கள் சான்றுபகர்கின்றன. திருநாவுக்கரசு நாயனார் சகோதரியாரும் இளம்விதவை திலகவதி, பரமவையார் இன்னும் பலரும் கோயிலிலே திருப்பணி செய்துகொண்டிருந்தார்கள் என்று நூல்கள் தெரிவிக்கின்றன. இத்தனையோரைத்தான் ஆதியில் தேவடியாள், தாசி என்று அழைக்கப்பட்டனர் என்று பல அறிஞர்களும், அச்சொற்களின் பொருளும் நமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றது என்பதை எவரும் அறிவர். இப்பணிபுரியும் மகளிர்கள் கோயில்களில் ஆடலும், பாடலும் வல்லவர்களாயிருக்கின்றனர். இக்கோயிலில் நடக்கும் பூஜையின் ஓர் அங்கம். இதைப்பற்றி மிகவிரிவாய் சென்னை சட்டசபையில் திரு. முத்துலட்சுமி அம்மையாரின் பொட்டுறுப்பு மசோதாவை எதிர்த்து திரு. சத்தியமூர்த்தி பேசியதும் அதற்கு அம்மையார் பூஜை செய்தல் என்னும் புண்ணியத் தொழிலைச்செய்யும் பார்ப்பனர் பூஜையின் ஓர் அங்கமாகிய ஆடற்பாடல்களையும் மற்றும் தொழிலையும் தம் பார்ப்பனச் சோதரிகளைக்கொண்டே செய்து அப்புண்ணியத்தை பெற்றுக் கொள்ளக்கூடாதா? அதற்காக என் ஒரு ஜாதியாரை ஏற்படுத்தி அவர்களைக்கட்டாயப்படுத்த முயற்சிக்கிறீர்கள் என்று கொடுத்த சாட்டை அடியும்லோகப்பிரசித்தமானது. இந்த இத்தனைய கோயிற்திருப்பணிபுரிந்து வந்தபெண்கள் கோயில் அர்ச்சகர், தர்மகர்த்தர்கள் முதலியவர்களோடு அடிக்கடி பழகநேர்ந்தது. இப்பழக்கம் நாளடைவில் முற்றிநாளடைவில் அப்பெண்கள் சோரத்தனம்புரிய ஆரம்பித்துவிட்டனர். பலபெண்கள் பிழைக்கவழியற்ற சிலசோம்பேரிக்கூட்டம் சிவவேடந்தாங்கிகோயில்கள்தோறும் சென்று பஞ்சுபுடன் தீர்த்த ஸ்தலயாத்திரைவருவதுபோல் பாசாங்குகாட்டி தாங்கள் முற்றத்துறந்த முனிவர்கள் போன்று பாவனைகாட்டி கோயில்களில் திருப்பணிசெய்துகொண்டும், பாடிக்கொண்டும் ஆண்டவதியும் தேவடியாள்கள் மீது கண்ணேட்டஞ்செலுத்திவருவதும் நாளடைவில் இருவர்மனமும் ஒருமைப்பட்டு காதல்தடித்து மெய்யுறுபுணர்ச்சியிலிறங்குவதும், பல பெண்கள் இச்சித்திர்பத்தை அறந்து பேரின்பமடைதலே நமது பிறவியின் நோக்கம் என்ற மனப்பான்மையுடையவராயினும் சிவனடியார்களின் காமவேட்கையைத்தணிப்பது சிவப்பணியென்றும் அதுமோட்சத்தை கொடுக்கவல்லதென்றும் சிவனடியார்கள் விருப்பிற்குமாறுகடப்பவர்கள் பொன்னுலகத்தையடைவரென்றும் கொண்டகம்பிக்கையினால் விலைமகளிர்கூட்டம் நாட்டில் பெருகிவிட்டது. (இக்கொள்கை பெரிய புராணத்தில் கண்குகாணலாம்) சடவுள்பெயராலும் விபசாரம்புரியும் இக்கூட்டத்தை ஒழிக்க சமூகசீர்திருத்த அறிஞர்கள் செய்யும் கண்முயற்சிக்கு சமயபக்தர் இடையூறுபுரியுமதோடு இத்தவிபசாரக்குழுவிற்கு வைதீகப்புலிகள் உற்சாகமூட்டி வருகின்றனர். வைஷ்ணவபெரியார்களெல்லாம் தங்கள் ஆசிக்கத்திலுள்ள ஆலயத்தில் கூட ஆடலும்பாடலும்புரிய அனுமதிப்பதுடன் தங்கள்வீட்டில் கடைபெறும் திருமணம், பூப்புப்புனித சோட்டி விழா முதலிய பலவிழாக்களுக்கு இவ்விலைமகளிரை அழைத்து ஆடல் பாடல் புரியச்செய்துபெரும்பொருள் ஈய்தலும், அக்குடும்பத்திலுள்ள முக்கியஸ்தர்கள் அவ்விலைமகளிடம் தம் இச்சையை நிறைவேற்றிக்கொள்வதும் ஒருபெரும்பெருமையாக நினைத்துவருகின்றார்கள். விபசாரம் பெருகுவதால் நாட்டின் நன்மையைத்தாங்கிநிற்கும் பிரதான தூண்களின் ஒருபகுதியாகிய பெண்களிற்பலர் விபசாரத்திலீடுபட்டு நோய்வாய்ப்பட்டு அல்லற்படுகிறதோடு, அந்நோய் அவர்களுடன் கலந்து ஆண்களுக்கும் பற்றிப்பின்னர் அவர்களின் மனைவிக்கும், பிறகு அவர்களின் வம்சங்களுக்கும் அந்நோய்பீடித்து நாளடைவில் இந்தியாவே ஒருநோய்கொண்ட தேசமாய்விடும் என்பது யாதொரு ஐயமுமின்றும். அப்பெரும் நோய் நாளடைவில் பெருகி வருகின்றதென்பதை கண்ணிமையோ போன்றவர்கள் கூறுவதைமறுப்பினும் சைவப்பெரியார் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தம்பெண்ணின் பெருமை என்னும் நூலில், 'பதியிலார் என்னுங்குலத்தவர் மட்டும் இப்பொழுது விலைமகளிராகிறாரில்லை. வேறு பல குலத்தினின்றும் பல காரணங்களால் ஒதுக்கப்பட்ட சகோதரிகளும் விலைமகளிராகின்றார்கள். நாளுக்கு நாள் விலைமகளிர்கூட்டம் பெருகுகிறது. அத்தொழிற்சென்னவீதிகள், விதிகள் வாணிபங்கள், தாருகள் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு வறுமை ஒருகாரணம். பொதுவாக நாட்டில் சிறப்பாக இந்துமதத்தில் பெண்ணுலகிற்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றொருகாரணம். நற்கால நாகரீகம் இன்னொருகாரணம். வேறுசில காரணங்களுமுண்டு என்று கூறுவதை ஆல்திகர் என்று கூறிக்கொள்வரிற்யாரே

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

நாம் என்ன சொல்லுகிறோம்.

(எஸ். வி. தோந்தி)

சிவமதத்திற்கு விஷ்ணு, ருத்திராக்ஷம் மதச்சின்னமாக இருப்பதுபோலும் வைணவமதத்திற்கு நாமம், துளசிமணி முதலியவை மதச்சின்னமாக விளங்குவதுபோலும், கிறிஸ்துவமதத்திற்குச்சிலுவை மதச்சின்னமாக இருப்பதுபோலும், இன்னும் ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு முக்கிய சின்னம் அல்லது கொள்கை இருப்பதுபோலவே தோழர். காந்தியின் 'ராமராஜ்ய' மதத்திற்கு 'கதர்' ஒரு மதச்சின்னமாகத்திகழ்கின்றன. எல்லா மதங்களையும், அதனதன்சின்னங்களையும் ஒழிக்கவேண்டுமென விரும்புவோர் காந்தியின் 'ராமராஜ்ய' மதத்தையும், அதன் சின்னமாகிய கதரையும் ஒழிக்காது விடமுடியுமா? ஒருநாளும் முடியாது முடியாது.

தோழர். காந்தியையும், காங்கிரசையும் சுயமரியாதை இயக்கத்தினர்கள் தாக்காதிருந்தால் சுயமரியாதை இயக்கம் பிரபல்யமடையும் என்று அநேகர் பேசிக்கொள்வதோடு சுயமரியாதை இயக்கத்திலுள்ள சில நண்பர்களும் சொல்லுவதுண்டு. நமது இயக்கம் பிரபல்யமடையவேண்டும். நம்மைப்பிறர்புகழவேண்டுமென்ற காரணத்திற்காக குற்றமுள்ளவைகளைத் தாக்காதிருக்கமுடியுமா? குற்றமுள்ள செய்கைகளைத்தாக்குவதின்மூலம் நமது இயக்கத்திற்குச் செல்வாக்கு இல்லாதுபோகுமானால் அதுபற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. எனெனில் நம் நாட்டு மக்களுக்குச் சரியானபடி பகுத்தறிவு ஏற்படவில்லை என்றுதானே கொள்ளவேண்டும். தோழர் காந்தியையும், காங்கிரசையும் நாம்காரணமாகியமின்றித் தாக்குவதேதடையாது. அவ்வாறு தாக்கவேண்டுமென்ற அவசியமுமில்லை. வரத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்பு மதம், கடவுள், சடங்கு, சாத்திரம் முதலியவைகளின்மூலம் செய்துவந்த கொடுமைகளை இன்று தேசமகாசபை என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரசும், அதன் கர்த்தாவாகிய காந்தியும் செய்துவருகின்றனவோவென்று அதைத்தாக்காதிருக்கமுடியுமா? உதாரணமாக நாம் 'மதம்' வேண்டாமென்கிறோம். காந்தியும், காங்கிரசும் 'மதம்' வேண்டுமென்று சொல்லுவதோடு சும்மா இருக்கின்ற மதங்களைக்குப்பாதுகாப்பும் அளிக்கின்றோமென்றுசொல்லுகிறார்கள். மேலும் காந்தியோ மதமற்ற அரசியல், அரசியலாகாது என்று அடிக்கடி கூறிவருவதுயாவரும் அறிந்தவிஷயமாகும். நாம் உற்சவம், பண்டிகை முதலியமதசம்பந்தமான செயல்கள் கூடாதென்கிறோம். காந்தியும், காங்கிரசும் உற்சவம் பண்டிகை முதலியவை வேண்டுமென்று சொல்லுவதோடு காந்திபடத்தையே அலங்காரஞ்செய்து அதற்கு தேய்காய், பழம், முதலிய நிவேதனச்சாமான்கள் வைத்து கற்பூரம் கொளுத்தி அசல் உற்சவம் கொண்டாடுகிறார்கள். தீபாவளி என்று தெரியாத ஜனங்களுக்கு கதர் விளம்பரம் செய்வதன் மூலம் அதாவது 'தீபாவளி வருகிறது சுதந்தக்கதர் கட்டுங்கள்' என்று விளம்பரம் செய்து பண்டிகைகளை கொண்டாடச்செய்கின்றார்கள். நாம் 'கடவுள்' உணர்ச்சியே கூடாதென்கிறோம் காந்தி நான் பேசும் பேச்சுக்களில் பெரும்பாலும் கடவுள் உணர்ச்சியைப் புகுத்திக்கொண்டேவருகிறார். நாம் தீண்டாமை எந்தவகையிலேனும் இருக்கலாகாதென்று சொல்லுகிறோம். காந்தியோ தீண்டாமை நீங்கவேண்டியதுதான் ஆனால் அது ஆத்மாவிற்கேயன்றி சரீரத்திற்கில்லை; என்று தத்துவார்த்தம் பேசுகிறார். நாம் 'வருணாச்சிரமதர்மம்' 'சனாதனதர்மம்' போன்ற மனித சமூகத்திற்குக்கொடுமை செய்பவர்கள் ஒழியவேண்டுமென்கிறோம். காந்தியும், காங்கிரசும் அவைவேண்டுமென்றும், அதை நிலைத்திருப்பதற்குப்பாதுகாப்பும் அளிக்கின்றோமென்றும்சொல்லுவதோடு, காந்தி தன்னைப்பிறபெரிய சனாதனஹிந்து எனச்சொல்லிக்கொள்ளுகிறார். நாம் மறுபிறப்பில்லையென்று சொல்லுகிறோம். காந்தி மறுபிறப்பு உண்டென்று பிரசாரம் செய்கிறார். நாம் சிராத்தம் முதலிய இறந்தவர்களுக்குச்செய்யும் கிரிகைகள் கூடாதென்று சொல்லுகிறோம். காந்தியோ பண்டிதமோதிலால்நேரு இறந்தற்கு வைதிக முறைப்படி சகலகிரிகைகளையும் செய்தார் என்று பத்திரிகையில் படித்தோம்இவைதவிர இன்னும் நமதியக்கத்திற்கு நேர்மாறான கொள்கைகள்பலதாங்கிநிற்கிறோம், காந்தியிடத்திலும் உண்டு. இவ்விதகாரணங்களைக்கொண்டு நாம் காந்தியையும், காங்கிரசையும் தாக்குதல் கூடுமா? கூடாதா? என்பதைப் பொறுப்புள்ள பொது ஜனங்களும், வாசகநேயர்களும் முடிவுகட்டவேண்டுமென விட்டுவிடுகிறோம்.

ஐந்துசாதத்தல் நிறைக்குள்பட்டுஞ்சுமூலம உற்பத்தியாகும் கதரைநாம் ஆறுரூபாய்க்கும் குறைந்தவிலைக்குவிற்கிறோம் அதேஇடையுள்ள அன்னிய நாட்டின் துணியை இருபது ரூபாய்க்கும் மேற்பட்டவிலை கொடுத்து வாங்குகிறோம் என்று சில நண்பர்கள் புள்ளிவிபரத்துடன் சொல்லுகிறார்கள். இந்நண்பர்களுக்கு ராஜபாளையம் கதர்போன்ற இன்னும்வேறு நாசனகதர்களின் விலை தெரியாதுபோலும், மில் நூலினால்நெய்யப்படும் துணிகள் ஐந்து ராத்தல் நிறைக்குட்பட்டது மூன்று ரூபாய்க்குக்கிடைக்கும்போது அந்நண்பர்கள் சொல்லும் கதரை ஆறு ரூபாய் கொடுத்து ஏனவாங்கவேண்டும்? மேலும் நாசனகதர்களெல்லாம் ஐந்துராத்தல் நிறையுள்ளதை பத்துப்பதினைந்து ரூபாய் விலை கொடுத்து எப்படி வாங்குவது? அன்னிய நாட்டின் துணிகள் இடைகுறைவாகவும் விலை அதிகமாக இருப்பதையும் புள்ளி விபரத்துடன் சொல்லிய அன்பர்களுக்கு நம்நாட்டின் இடைகுறைந்த துணிகள் அதிகவிலைக்கு விற்கின்ற செய்தி தெரியாது போனதற்கு வருந்துகிறோம். இந்நண்பர்களின் நோக்கம் குறைந்தவிலையுள்ள அதிக இடையான துணிகளைத்தான் வாங்கிக்கட்டவேண்டுமென்றிருக்குமானால்நாம் சொல்லும் துணிகளை வாங்கிக்கட்டுவதில் ஆட்சேபமிருக்கக்கூடாதன்றோ. அன்றியும் நாசனகதர்களை ஒழிப்பதற்கு பிரயத்தனமும் செய்யவேண்டுவதுடன் சாதாரணமான கதர்களையும் ஒழிக்கவேண்டுமன்றோ?

மருந்து வியாபாரிகள் தங்கள் மருந்து எவ்வளவு கேவலமாக இருந்தாலும் அதைப்பெருமைப்படுத்தி விளம்பரம் செய்வதுபோலும், சிந்தாமணிலேகியக்காம்பெனிக்காரர்கள் அதன் மோசமான கெடுதலை உணர்ந்தும் அதைப்பெருமையாக மூலைக்குவலுவேற்றி நாம்புகளுக்கு முறுக்கேற்றவல்லதென விளம்பரஞ் செய்தல்போலும், சிகரட்டு, சுருட்டு, பீடி, பொடி முதலிய கம்பெனிக்காரர்கள் அவைகளின் தீமைகளைச் சிறிதும் கவனியாது பெரிய பெரிய விளம்பங்கள், சிறுதுண்டுப்பிரசுரங்கள், உபயோகிப்பதால் ஏற்படும் நன்மை எனப்படுங்களுடன் கூடிய நோட்டீஸ்கள் போட்டுத்தங்கள் சுயநலக் கொடுமைகளை வளர்ப்பதுபோலும், புஸ்தக வியாபாரிகள் அற்பப்புஸ்தகத்தையும் ஒப்புயர்வற்ற புஸ்தகமென விளம்பரம் செய்தல்போலும், புராணங்களில் ஆபாசக்களஞ்சியம் நிரம்பி இருந்தும் அதை மோக்ஷத்திற்கு வழிகாட்டியெனச் சொல்லி ஏமாற்றுவதுபோலும், நூற்றுக்கு ஐந்து வட்டி, ஆறுவட்டி வீதம் வட்டிவாங்கி ஏழைஉழைப்பாளிகளைக்கொடுமைப்படுத்தி கொள்ளையடித்து கோயில், மடம் முதலியவை கட்டி தன்னைத் தர்மப்பிரபுவாக நினைத்துக் கொள்ளுவதுபோலும், இன்னும் உலகில்ஏமாற்றும் தொழில்கள் அநேகம் இருப்பதே போன்று, கதர்க்கடைகாரர்களும், சர்க்கா சங்கத்தார்களும், அவர்களுடைய சகாக்களும் கதரின் கேவலமான உழைப்பையும் கிரக்கியான விலையையும் உணர்ந்தும் அதை இந்தியாவின் வறுமை நீக்கவந்த தென்றும், அறுபதுகோடி ரூபாய் மிச்சப்படுத்த வந்ததென்றும் பாமர மக்களை ஏமாற்றிபெருமையாக விளம்பரப்படுத்திப் பேசுதலும், கதர்கட்டாதவர்களை "தேசத்துரோகி" எனத் தூற்றுவதிலும் அதிசயமொன்றுமில்லையன்றே.

புத்திரப் பேரில்லாதவர்கள் "புத்" என்னும் நரகில் வீழ்ந்து கஷ்டப்படுவார்களென்றும், ஆகையால் புத்திரப்பேறடைய வேண்டியதற்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து புத்திரப்பேறடைய வேண்டியது அவசியமென்று சொல்லப்படுகிறது. புத்திரப்பேரில்லாதவர்கள் "புத்" என்னும் நரகில் வீழ்ந்து கஷ்டப்படுவதாக இருந்தால் தெய்வத்தன்மை பொருந்தியவர் என்று சொல்லிக்கொள்ளப் பட்டவரும் "புதல்வரைப் பெறுதல்" என்னும் அதிகாரமிட்டு பத்துக்குறள் பாடியவருமான திருவள்ளுவரு

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

நீர் யார்?

(நான் எழுதுவது)

கடவுளே,

உமக்கு 'ஞானதிருஷ்டி' உண்டென்று புராணங்கள் கூறுவதாலும், நீர் இல்லாமல் அணுவும் அசையாது என உலகு நம்புவதாலும், நான் என்விண்ணப்பத்தில் குறிப்பிடும் ஒவ்வொரு சொல்லும் 'உமது சுவனத்திலிருந்து தப்பமுடியாது' என்பது ஷரிவிதிகளை அனுசரித்த உண்மையல்லவா? ஆகையால் உமது ஸிலாசம், இருப்பிடம் முதலியன தெரியாமல் எழுதத்துணிந்த இவ்விண்ணப்பமும் ஆஸ்திகர்களதுகொள்கைப்படி உமது திருஷ்டியில் பிரகாசிக்கும்.

பெற்றோராலும்மற்றோராலும், எனக்கும் உமக்கும் பாத்தவ்விய மேற்படுத்தியநாள் முதல் நீயார்? என்னும் கேள்வியே அடிக்கடி என்மனதில் எழவே, கேள்வி வாயிலாகவும், புத்தக மூலமாகவும் அச்சங்கைக்கு விடைதேடினேன். இறுதியில் இதுவரை உலகுக்குத்தெரியாத உம்மைப் பற்றிச்சிந்திப்பதும், அதன்பயனாக எழும் வினாக்களுக்கு விடை தேடமுயலுவதும் பைத்தியகாரத்தனமென்றும், அம்முயற்சியாவும் விழலுக்கிறைத்த நீர் 'போலாகுமென்றும் நிச்சயித்தேன்.

உமது பக்தகோடிகளில் ஒரு சாரார் உம்மை உயர்திணை எனத் தீர்மானிக்கிறார்கள். மற்ற கூட்டமோ அஃறிணை என முடிவு கட்டுகிறது. ஒரு பகுதி கடவுள் அருள்பிரகாசமாய் 'ஒப்பற்ற பெருஞ்ஜோதியாய் விளங்குகிறார் எனப்பறைசாற்றும்போது, வேறொரு பெறும்பகுதி 'அருள்மயமான பெரும் காரிருள்ரூபமே கடவுள்' எனக்கூவுகிறது, ஒரு பக்தர் 'நானே கடவுள்-கடவுளே நான்' எனமார் தட்டுகிறார். மற்ற பக்தரோ கடவுள் நானும் இல்லை, நீயுமில்லை. அவர் 'ஃஜி' என அண்ணார்ந்து பார்க்கிறார். புராணங்களோ கடவுள் பல ரூபத்தோடு தேவர்கள் ஹஸ்சமாய் விளங்கி, பெண்டுபிள்ளைகளுடன் குடும்ப சமேதராய் விளங்குகிறார் எனப்பெரிய எழுத்துக்களில் பிரசுரித்து இந்நாட்டில் சாசுவதமாய் நிலைத்து நிற்கின்றன, வேதமோ 'அவர்யாருமற்றவர், தனிப்பட்டபொருள், ஒப்பற்ற முன்னியன், பாசமற்றவன், என சதிர்ப்பிரசாரம் நடத்துகிறது. புராண நம்பிக்கைகொண்ட வைதீகபக்தர்கள் 'கடவுள் நிலவுலகிலே பலதடவை பலரூபத்தோடு பிறந்து, அழிந்து மறுபடிமறுபடி உதிப்பவர்' எண்கிறார்கள். வேதஸ்மிருதி ஆராய்ச்சியில் இறங்கி அவைகளை மனப்பாடம் செய்து நிற்கும் ஒருசிலரோ 'கடவுளுக்கு பிறப்புமில்லை, இறப்புமில்லை, அதித்தியமான வல்துக்களால் பாதிக்கப்படாதவர். நித்தியானந்தர்' என்கின்றனர். கடவுள் பலரிருக்கின்றனர் என்பவர் ஒரு கூட்டம்; 'இல்லை கடவுள் ஒருவரே. அவருக்கு ரிஷிகள் பலபெயர்கள் சூட்டியிருக்கின்றனர் என மறுத்துக்கூறுகிறது மற்றகூட்டம். 'மனமே கடவுள், இருதயமே கடவுளின் இருப்பிடம்' என கம்பியிருப்போர் எத்தனை? கடவுள் மனம், மொழி, மெய்களைக்கடந்தவர் என எண்ணியிருப்போர் எத்தனை? 'ஆத்மாவே கடவுள், கடவுளே ஆத்மா? என இரண்டையும் பொருத்தியழகு பார்ப்போர் எவ்வளவு? ஆன்மா வேறு; கடவுள் வேறு, ஆன்மா சரீரத்தைவிட்டுப் பிரிந்ததும் கடவுளைச் சேர்கிறது என நேரில்கண்டோர் போல் கத்துவோர் தொகை எவ்வளவு? இதுபோல இன்னம் எவ்வளவு பக்கமாறுலும் உம்மைப்பற்றி உலகோர் கொண்ட எண்ணங்களையும், முடிவுகளையும், எழுதிக்கொண்டே போகலாம்! இவைகளிலிருந்து எதை உண்மைகண்டோர் கூற்று என்று அறிவது? உம்மைப்பற்றி அவர்கள கொண்ட எம் 'முடிவு' 'முற்றும்பாடில்லாத உண்மை' என்று நம்புவது? அவரவர்களது புராணப்படிப்பு, உலகவிசாரணை, பகுத்தறிவு, உண்மைக்கல்வி, அனுபவ முதிர்ச்சி முதலியவைகளுக்குத் தக்கபடி உம்மைப்பற்றிக்கூறி விட்டு மறைந்தார்களேயொழிய நிலையான— முறண்பாடில்லாத— பகுத்தறிவுக்கு ஏற்ற—பொருத்தமான அபிப்பிராயங்கள் உம்மைப்பற்றி ஒருவரும் வெளியிடவில்லையே! உம்மைப்பற்றிய ஆராய்ச்சி சம்பந்தமாக ஒருவார்த்தை யாரம்பித்தாலும் அது பயனற்ற தர்க்கத்திற்குக்கொண்டுவந்து விட்டு பிறகு முடிவேயில்லாமலல்லவாபோகிறது! சாதாரண மனித அறிவுக்குக்கடவுளின் சக்தி—அவரைப்பற்றிய உண்மையான விருத்தாந்தம் தெரியப்போகிறதா? என்று சலித்து மொழிவோரும் உளர், மனித அறிவுக்கு எட்டாதி—மனிதனால் அறியமுடியாத ஒருபொருள்—சக்தியிருக்குமானால் அது மனிதனுக்கு எவ்வகையில் பயன்படும்? அத்தன்மையுள்ள ஒரு சக்தி இருக்கிறது என்று பூரணமாய்த் தீர்மானிப்பதுதான் எங்ஙனம்?

வைதீகர்களால் உமது பிரதிநிதி எனப்போற்றப்படுபவரும், பாமர ஜனங்களால் 'பேசுந்தெய்வம்' எனக்கொண்டாடப்படுபவருமே, மஹாத்மா என்றஸ்தானத்தில் வீற்றிருப்பவருமான திரு. காந்தியவர்களும் உமது பெருமையைப்பற்றி அந்தாதி ஒன்று பாடிவிட்டார். அவராவது உம்மைப்பற்றி பிறர்மனதில் தெள்ளெனப்படும்படி பாடியிருக்கிறாரா? 'கடவுளின் சக்தியிருக்கிறது நான் பார்க்க முடியவில்லை. ஆனால் உணருகிறேன்' என்று பொருள்படக் கூறினார். அவரது உணர்ச்சி எத்தகையதோ! மூக்கையறுத்துக்கொண்டு தேவர்கள் தெரிகிறார்கள் பார்! என்று குரு ஆட, சிஷ்யகோடிகள் தாங்களும் ஏமார்ந்து மூக்கையறுத்துக்கொண்டு 'ஆ! ஹா! தேவர்கள் அமர்ந்திருக்கும் தெய்வீகக்காட்சி என்னே! எனச்சேர்ந்து கூத்தாடினார்களாம். அதுபோல திரு. காந்திதம் மனதிற்கு மாந்திரம் உறைக்குமாறு உணரும் தெய்வீக உணர்ச்சியை வருணச்சிரமதர்மிகளும், ஐயங்கார் சுவாமிகளும், மாளவியாகோஷ்டியாரும் தான் உணர முடியும்போலும்!

தெய்வமே நீர்பேசும் மனிதனை சிருஷ்டிக்கிறாய் என உலகம் புகழ்கிறது. திரு. காந்தியும் தம்மைச்சிருஷ்டித்தவர் கடவுள் தான் என எண்ணியிருக்கிறார். ஆனால் இயற்கை ஆராய்ச்சியறிவுள்ள மனிதன் பேசும் பெட்டிகளைச்சிருஷ்டித்திருக்கிறான். உம்மால் சிருஷ்டிக்கப்பட்ட காந்தி பேசுவதைப்போலவே மனிதனால் சிருஷ்டிக்கப்பட்டபெட்டிக காந்தியும் பேசுகிறது. உமது மனித சிருஷ்டிக்கு இயற்கையின் பாமர அணுக்கள் எப்படித் தேவையோ அஃதேபோலப்பேசும்பெட்டி சிருஷ்டிக்கவும் ஒலியின் அலைகளே தேவை. உமது சிருஷ்டிக்கு நீரே காரண கர்த்தா எனக்கூறமுடியாமலும், நம்பமுடியாமலும் இருக்கிறது. ஆனால் பேசும் பெட்டிகள் உண்டானதற்குகர்த்தா—தலைவன் மனிதனின் அறிவேயாகும். இது பிரத்தியட்சப்பிரமாணம், மனிதனின் அறிவே உமது தொழிலுக்குப்போட்டிபோட்டு உம்மைமானபங்க மடையச்செய்கிறது. பகுத்தறிவு கடவுளைப்புறமுதுகிட்டு ஓடச்செய்யும்' என்பதை உண்மையில் உணர்ந்தவர்கள் மேல்நாட்டார். அறிவுக்கு மதிப்பும் பலமும் கொடாமல் உமது பாதத்தடியிலே அறிவை அடமானம் வைத்து ஏமார்ந்து பிறர்கையில் சிக்கி அடிமையாய் நிற்பவர் என்றார். மனிதனின் அறிவின்பலனுய், புத்தியின் சக்தியாய், ஆராய்ச்சியின் முடிவாய் விளங்கிய அதிஅற்புதமான—தத்ரூபம் மனிதனைப்போல் பேசி, மனிதனை மகிழச்செய்து அவனது ஊக்கத்தை மேன்மேலும் ஊக்கி வளரச்செய்ய ஹேதுவான ஒரு யந்திரத்தின் முன்பு அறிவுள்ள மனிதனேருவன் அமர்ந்து நோக்குவானேயானால் அறிவுச்சுடர் எறியும் காட்சியைக்கண்டானந்திப்பான். மனிதனின் அறிவினால் என்னென்ன அற்புதங்கள் உலகில் விளைகின்றன? என்று மகிழ்வான். அறிவே மூடநம்பிக்கை என்னும் அந்தகார இருளை ஒழிக்கும் ஒளி என முடிவு கட்டுவான். அவ்வறிவின் பேரொளியிலே ஐக்கிய மடைந்து மிகமிக இளகி அவ்வானந்தத்திலே லயித்து, மெய்ம்மறப்பான். உம்மையோ மனிதர் முன்னேற்றத்திற்குதவாக் கேவலம் பதார்தனத்தள்ளுவான் அசைக்கணமும் உன்னை நினையான். அறிவின் முதிர்ச்சியினால் எழுந்த பயனை 'ஆனந்தத்தின்' முன் அமர்ந்த காந்தி எதை நினைத்துருகினர்? மனித வகுப்புக்குப் பெரிய தடைகல்லாயிருப்பவரும், மனித அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் முன் சின்னபின்னப்பட்டு நிலை கலங்கி அடியோடு மறையும் புராணங்கடவுளான உம்மை நினைத்தார்! விவேகமற்ற இந்திய மனிதமுன்னேற்றத்திற்கு விரோதியான உம்மை,ஐந்து நிமிடநேரம் எண்ணி எண்ணி மனமுருகினர். இறுதியில் அவரும் உம்மைப்பார்க்க முடியவில்லை" என்றே மங்களம் பாடினர். பெரிய மகான்கள் கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து உண்டோ இலையோ என்னும் சந்தேக நிலையில் நிற்கும் உம்மை "நான்" நீர் யார்? எனத் தேடிக்கண்டு பிடிப்பது சாத்தியமான

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

E. V. ராமசாமி

ஐரோப்பா

சுற்றுப் பிரயாணம்.

திருவாளர்கள்,

ஈ. வெ. ராமசாமி

எஸ். ராமநாதன்

ஆகிய இருவரும் ஐரோப்பா கண்டம் முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்ய13ம் தேதி சென்னையி லிருந்து(AMBOISE) அம்போய்சி என்னும் பிரஞ்சுக்கப்பலில் புறப்பட்டு விட்டார்கள்.

ரோஜா முத்தையா
ஆய்ச்சி நூலக அறக்கட்டளை

அறிவிப்பு.

மலேயா, சைகோன், ஆப்பிரிக்கா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்பும் பத்திரிகைகளின் தபால்கட்டணம் அரை அணாவிலிருந்து முக்கால் அணாவாக உயர்த்தப்பட்டிருப்பதால், இந்த டிசம்பர் மாதம் முதல் நமது "குடி அரசி"ன் வெளி நாட்டுச் சந்தா ரூபாய் நான்கிலிருந்து, ஐந்து ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறதென்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

பிரிண்டர் & பப்ளிஷர்,
"குடி அரசு"
ஈரோடு.

குடி அரசு

ஈரோடு 1931 டிசம்பர் 13

நமது ஆசிரியரின் ஐரோப்பா பிரயாணம்:

—:0:—

இன்று 13—12—31-ல் நமது ஆசிரியர் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் திரு. இராமனுதன் அவர்களுடன் (Ambosie) அம்போய்சி என்னும் பிரஞ்சு கப்பலில் ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்வதற்கு புறப்பட்டு விட்டனர். திரு. இராமசாமி அவர்கள் உடல் நிலை தொடர்ந்த பிரயாணத்திற்கு இடங்கொடுக்க முடியாத நிலையிலிருப்பினும் இயக்க வளர்ச்சியை முன்னிட்டு என்ன நேர்ந்த போதிலும் தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்து வருவதென்ற எண்ணத்துடனேயே புறப்பட்டு விட்டார். சுற்றுப் பிரயாணத்தை முடித்து விட்டு மீண்டும் நம் நாடு திரும்புவதற்கு ஏறக்குறைய 3, 4 மாதங்கள் செல்லுமெனத் தெரிய வருகின்றது. இவர்களது சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகளும், அவ்வப்போது நமதியக்க சம்பந்தமான கட்டுரைகளும், நமது பத்திரிக்கையில் வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். மேலும் மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றி நமது மக்கள் நன்கு தெரிந்து கொள்ளுமாறு இது வரையிலும் மேல் நாடு சென்ற எந்த இந்தியரும் நடு நிலைமையான தாராள மனப்பான்மையுடன் அபிப்பிராயம் கூறியதில்லை. இது மாத்திரமல்லாமல் மேல் நாடு சென்று திரும்பியுள்ள இந்தியர்களான நம்மவர்கள் பெரும்பாலும், அரசியல், கல்வி, மதவிருத்தி இவைகளை பற்றியே தான் இது வரையிலும் ஆராய்ந்திருக்கின்றனரே யொழிய அத்தேசத்து மக்கள் வழக்க பழக்கங்கள், மதபக்தி, கடவுள் பக்தி இவைகளை அவர்கள் எந்த அளவுக்குத் தங்கள் வாழ்க்கையில் உபயோகப்படுத்திக் கொள்ளுகின்றனர் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலை கொண்டதில்லை அவைகளைப் பற்றி நமது மக்களுக்கு எடுத்துக் கூறியதுமில்லை. காரணம் எதுவாக விருக்கலாமென கருதுகின்றீர்கள். அந்நாடுகளின் உண்மையான நிலை நமது மக்கள் தெரிந்து கொண்டால் "இந்து" மதத்தின் கதி என்னவாகுமோ என்னும் பயமே தான் காரணமாகும்.

இத்தகையவர்கள் தான் இன்று நமது நாட்டில் மேல் நாடு சென்று திரும்பியவர்கள் என்ற புகழுக்குள் புகுந்து கொண்டு? மக்களை மிருகங்களெனக்கருதி வேட்டையாடி வருகின்றனர். இப்படிப்பட்ட சமரசமற்ற மனப்பான்மையுடையவர்கள் எண்ணத்தில் மண்ணையள்ளிப் போடுவதே நமது ஆசிரியரின் சுற்றுப்பிரயாண நோக்கமாகும்.

ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்தின் பொழுது ஆங்காங்கு நமது நாட்டு சமூகநிலையையும், நமது இயக்கக்கொள்கைகளையும் பிரசாரம் செய்தும் வருவார்கள். இதனால் மேல் நாட்டு மக்களுடைய ஆதரவும் நமதியக்கத்திற்கு ஏற்படும் என்பது திண்ணம்.

உலக ஒற்றுமை வேண்டுமேயானால் சகல தேசமக்களுக்கும் பொருத்தமான சமூகச்சட்டங்கள் ஏற்படுதல் வேண்டும். இம்மாதிரியான காரியங்களைச் செய்வதற்கு நமது நாட்டில் முன்வருவோரைவிட தடைசெய்கின்றவர்கள் அல்லது குறை கூறுகின்றவர்கள் தான் மலிந்து காணப்படுகின்றனர். இத்தகையமக்களுக்கிடையே இம்மாதிரியான உணர்ச்சி தோன்றுவதென்பது இலகுவான காரியமல்ல. அநேலும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதென்பதோ அதிக கஷ்டமான காரியமாகும். இப்படிப்பட்ட காரியங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதற்கான வழிகளைக் கண்டுபிடித்து மக்களையும் அவ்வழியையே பின்பற்றுமாறு செய்வதென்ற நோக்கத்துடன் தங்களது திரேக நிலையையும், பொருட்செலவையும் கவனியாது. சுற்றுப்பிரயாணத்திற்குத் துணிந்த நமது கிழச்சிங்கத்தையும், அவரது வலக்கையாம் இராமநாதனையும், எவ்வாறு நமதுமக்கள்போற்றுதிருக்கமுடியும். நம்பைப்பொருத்தவரையில் வெற்றியும், தோல்வியும் ஒன்றேயாகுமும், வெற்றியும், தோல்வியும் சந்தர்ப்பத்தை பொருத்தாகுமென்பது தான் நமதியக்க அபிப்பிராயமே யல்லாது திரு. காந்தியவர்களைப் போல் "கடவுள் செயல்" என்று ஒரு போதும் கருதுவதில்லை. மேலும் நமது ஆசிரியரும், திரு. ராமநாதன் அவர்களும் திரு. காந்தி அவர்களைப்போல் வெற்றி மாலை சூடி வருவதாகச் சென்று "கடவுள்" சித்தத்தால் "தோல்வியடைந்து விட்டேன்" என்ற முகாரி இராகப்பல்லவியைப் பாடிக் கொண்டு இந்தியா திரும்பப்போவதில்லை. என் எனிலோ? நமது விடுதலை நமது சமூக ஒற்றுமையால் தான் ஏற்பட முடியுமேயல்லாது பிறரை எதிர்பார்த்துத் தூரதேசம் சென்று கிடைத்து விடமாட்டாது என்ற மாற்றமுடியாத அபிப்பிராயமே தான் காரணம்.

ஆகவே, நமது ஆசிரியாவர்கள் வெற்றியையோ, தோல்வியையோ எதிர்பார்த்து ஐரோப்பா செல்லவில்லை. தனது உடல் நலன், நமதியக்க வளர்ச்சி, மேல் நாட்டு மக்கள் பழக்கவழக்கங்கள், பொருளாதாரச் சமரசம், தொழிலாளர்கள் நலன், இவைகளைப் பற்றி ஆராயவும் தங்களது ஆராய்ச்சியால கிடைக்கப்பெற்றவைகளை இந்திய மக்களுக்கு எடுத்துக் கூறவுமேயாம். இத்தகைய நல்லசந்தர்ப்பத்தை நாம் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம், ஆனால் சந்தர்ப்பம் இப்பொழுது தான் இடங கொடுத்திருக்கின்றது.

இனி இச்சமயத்தில் நமது கடமை என்ன வென்பதையும் சற்று பரிசீலித்துப் பார்த்தல் வேண்டும். வைதீக, தேசீய, வருணாசிரம, பிராமண, இந்து மகாசமரட்சண, சபைகளெல்லாம் தங்களது வேலைகளை வெகு தீவிரமாகச் செய்துகொண்டு வருகின்றன வென்பதுவெளிப்படை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியோ, காசிக் தீண்டாதார் சத்தியாக்கிரகத்தை ஆதரிக்க மறுத்து விட்டது. குஜராத்தி ஹரிஜனங்களோ ஆதிதிராவிடக் குழந்தைகள் தங்களுடைய குழந்தைகளுடன் ஒன்று சேர்ந்து படிப்பதற்காகத் தீண்டப்படாதார், பயிர், பச்சைகளையெல்லாம் நெருப்பிற் கிரையாக்கினர். வைதீகக் கோஷ்டியினரோ குருவாயூர் சத்தியாக்கிரகத்திற்கு எதிர் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். திரு. காந்தியவர்களோ தீண்டாதாருக்குத் தனித் தொகுதி கொடுப்பதை தனது உயிரைத் தியாகம் செய்வதன் மூலமாகவாகினும் தடை செய்வதாகக் கர்ஜிக்கின்றார். நம் நாட்டுப் பார்ப்பனர்களோ சாரதா சட்டத்தைக் கொளுத்திவிட வேண்டுமெனத் துள்ளுகின்றனர். மதக்கர்த்தாக்களோ தங்களது கொள்ளையடிக்கும் தொழிலை இன்னும் விரிவுபடுத்திக் கொண்டே போகின்றனர். பணக்காரர்களோ அவர்களுக்காதரவளிக்கின்றனர். போதாக்குறைக்கு நமதியக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த பல நண்பர்களும் இன்று பொருளாதார நிலையை யுத்தேசித்து நம்மை எதிர்க்கவும் ஆரம்பித்து விட்டனர். இம்மாதிரியான பல திறப்பட்ட எதிர்புகளுக்குள் இன்று நமது இயக்கம் பரவி வருகின்ற தென்றால் இன்னும் கொஞ்சம் தியாக புத்யுடன், பொறுப்புணர்ந்து ஒற்றுமையுடன் வேலை செய்ய முற்படுவோமானால் நமதியக்கத்தின் வளர்ச்சி எவ்வளவு வேகமுடையதாக விருக்கு மென்பதையும் சிந்தித்தல் வேண்டும். நமக்குள்ளிருக்கும் சில சில்லரை விவகாரங்களை இயக்க சம்பந்தப்படுத்தி இயக்கத்திற்கு கேடு விளைவிப்பதான வழியில் செல்லுவது நியாயமானதாகாது. ஆகையால் நமது ஆசிரியர், திரு. ராமசாமியும், திரு. இராமநாதனும்ஐரோப்பாசுற்றுப் பிரயாணம் செய்யும் பொழுது நாமும் நமது வேலையைத் தீவிரமாய் இங்கு நடத்த வேண்டும். பிறப்பதும், இறப்பதும் உலக இயற்கையையே யாயின் பிறப்பிற்கும், இறப்பிற்கும் மத்தியிலிருக்கும் நாட்களை சோம்பேரித்தனமாய்க்களிப்பதென்பதன்று. ஆகையால் ஒன்று கூடுங்கள், இயக்கத்தைப் பற்றிய வேலைகளில் உங்கள் சிந்தனையையும், நேரத்தையும் செலவிடப் பிரயத்தனப்படுங்கள் இவைகள் தான் ஐரோப்பா சென்று திரும்பும் நமது ஆசிரியருக்கும், திரு. இராமநாதனுக்கும், நாம்

ளிக்கும் பரிசாகும். ஆகவே நமது கடமைகளில் நாம் எப்பொழுதும் தவர மாட்டோமென்று உறுதி கூறுவதுடன், ஜோப்பாசுற்றுப் பிரயாணம், வெற்றியுடனும், சௌகரியத்துடனும், மனசமாதானத்துடனும் இருக்க வேண்டு மென விரும்புகின்றோம்.

தியாகிகளின் வீரச்செயல்.

—:0:—

நமது நாட்டுத் "தேசிய வீரத் தியாகிகள்" ஆகிய காங்கிரஸ்காரர்கள், இதுவரையிலும், மற்றவர்களைப் பதவி வேட்டைக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தது போக, இப்பொழுது அவர்களே பதவிகளுக்கு ஆசைகொண்டு நுனிநாக்கிலிருந்து தண்ணீர் சொட்டும்படி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தை, ஸ்தலஸ்தாபனத் தேர்தலுக்குக் காங்கிரஸ்காரர்கள் பலர் ஆங்காங்கே போட்டி போடுவதைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். ஆனால் இந்தத் "தியாகிகள்" எதற்காக ஸ்தலஸ்தாபனங்களுக்குப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள் என்பதைக் கேட்டால் தான் இவர்களுடைய அரசியல் ஞானமும், தேசாபிமானமிகுதியும், ஸ்தலஸ்தாபனங்களின் பிரயோசனத்தை இவர் எவ்வாறு அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் விளங்கும்.

ஸ்தலஸ்தாபனங்களில் அங்கம் பெற முன் வருகின்றவர்கள், "நான் நகரின் சுகாதாரத்திற்காக உழைப்பேன். எழை ஜனங்களின் வரிகளைக்குறைக்கப்பாடுவேன். நகரில் தண்ணீர் வசதியுண்டாக்கப் பாடுபடுவேன். விளக்கு வசதிகளை அதிகப்படுத்த முயலுவேன். எழை மக்களுக்குக் குடியிருப்பு வசதிகளை உண்டாக்க முயலுவேன். நகரில் பள்ளிக்கூடங்களை மிகுதிப்படுத்தவும், கட்டாயக்கல்வியை உண்டாக்கவும் பாடுபடுவேன். பிச்சைக்காரர்களின் தொல்லைகளை ஒழிக்கவும், வேலையில்லாதவர்களுக்குத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் உழைப்பேன். ரோடுகளை யெல்லாம் கப்பி ரோடுகளாகச்செய்யவும், தார் போட்ட ரோட்டுகளாக்கவும் பாடுபடுவேன்" என்று இமமாதிரியான விஷயங்களைக் கூறி ஓட்டுக்கேட்பார்கள். இது வேறெந்த நாட்டிலும் கடைபெறும் வழக்கம். இவ்விஷயங்கள் ஒரு நகரசபை, ஒரு நகரத்திற்கு ச்செய்யவேண்டிய காரியங்களுமாகும். இவ்விஷயங்களை உணர்ந்து இவைகளுக்காக முயலும் குணமுடையவர்கள்தான் நகரசபைகளில் அங்கம் பெறுவதற்கும் தகுதி வாய்ந்தவர்களாவார்கள்.

ஆனால் நமது நாட்டுத் "தியாகிகள்" எதற்காக நகரசபைக்குச் செல்லுகிறார்களென்றால் நன்கே காரியங்களுக்காகவே செல்லுகின்றார்கள். அந்த நான்கு காரியங்களாவன:— நகரசபைக் கட்டிடங்களிலும், அதன் அதிகாரத்திற்குட்பட்ட மற்ற இடங்களிலும் தேசியக்கொடியை கட்டுப் பறக்க விடுவதாகிய பயனற்ற காரியம் ஒன்று.

நகரசபையின் சிந்தா உத்தியோகஸ்தர்களுக்கு அதிக காள் உழைக்கக்கூடிய பெட்டியான துணியைக் குறைந்த தொகையில் வாங்கிக்கொடுப்பதை நிறுத்தி விட்டு, கொஞ்சகாளில் கிழிந்து தொலையக்கூடிய பயனற்ற கதர்த்துணியை அதிக விலைக்கு வாங்கிக் கொடுப்பதன் மூலம் எப்பொழுதும் இதற்காகும் செலவைக்காட்டிலும் அதிக செலவாகும்படி செய்வதாகிய காரியம் ஒன்று.

நகரசபையைச்சார்ந்த பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறு பிள்ளைகளுக்கு, நாகரீக—விஞ்ஞான சாஸ்திர—யந்திர அறிவைத்தடைப்படுத்துவதும், மூளையை மழுக்கக் கூடியதுமாகிய, தக்ளியிலும், ராட்டினத்திலும் நூல் நூற்கக்கற்றுக் கொடுப்பதாகிய காரியம் ஒன்று.

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குப் பகுத்தறிவுக்கு இடமில்லாமல், மூட நம்பிக்கையை உண்டாக்கக் கூடிய புராணங்களும், கதைகளும், மத நூல்களும் மாத்திரம் உள்ள திருத்தப்பெறாத—பயனற்ற பாஷையான ஹிந்தியைப் போதிக்கச் செய்வதாகிய காரியம் ஒன்று.

ஆகிய இந்த நான்கு வீர சூரப்ராக்கிரமத்தனமான காரியங்களுக்காகத் தொண்டைதண்ணீர் வற்ற, உயிர் கொடுத்துப் போராடவே காங்கிரஸ் தேசியப் புலிகள் ஸ்தல ஸ்தாபனங்களுக்குள் செல்லுகின்றனர் என்பதை அவர்கள் செய்யும் பிரசார மூலமாகவும், சில ஸ்தாபனங்களில் அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்களைக்கொண்டும் அறிந்திருக்கின்றோம்.

சமீபத்தில் சென்னை நகரபரிபாலன சபையிலும், பள்ளிக்கூடங்களில் ஹிந்தி பாஷையும், சர்க்கார், தக்ளி நிலைகளில் நூல் நூற்கக்கற்றுக் கொடுப்பதும் போதிக்கப்பட வேண்டும் என்னும் தீர்மானம் காங்கிரஸ் காரர்களால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தில் நம்பிக்கையில்லாத அங்கத்தினர்களும், மேற்படி தீர்மானத்திற்கு எதிராக இருந்தால் எங்கே அடுத்த தேர்தலில் சபையில் அங்கம் பெறாமல் போய்விடுவோமோ என்ற பயத்தினால் ஆதரித்து நிறைவேற்றி விட்டார்கள்.

அன்றியும் மற்றொரு நகரசபையில் சமீபத்தாளுள்ள தலைவருடன் காங்கிரஸ் காரர்கள் சமரசம் பேசும்போது, கதர், ஹிந்தி முதலியவைகளுக்கு ஆதரவளித்தால் சேர்மன் ஸ்தானத்திற்குப் போட்டியிடுவதில்லை என்ற ஒப்பந்தம் பேசியிருக்கலாம். இன்னும் சில நகர சபைகளில், காங்கிரஸ் காரர்கள் என்று இருப்பவர்களும், அவர்களுடைய அந்தஸ்தைப் பெற ஆசைப்பட்டுக்கொண்டிருப்பவர்களும் இவ்விஷயங்களுக்கு முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அறிகின்றோம்.

ஆகவே காங்கிரஸ் காரர்களின் மதச்சின்னங்களாக இருக்கின்ற மேற்கூறிய நான்குமே, நகர பரிபாலன சபைகள், தாலூகா போர்டுகள், ஜில்லா போர்டுகள், சட்டசபைகள், யூனிவர்சிட்டிகள் ஆகியவைகளின் முக்கியமான வேலைகளாக ஆகிவிட்டால் நமது நாடு எப்பொழுது அந்திய தேசங்களுக்குச் சமத்துவமான நிலையை அடைய முடியும் என்று யோசித்துப் பாருங்கள்.

அந்திய தேசங்களில் உள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் போன்ற பொது நிலையங்கள் யாவும், நாட்டு மக்கள் அனைவரையும், திடகாத்திரமுடைய—அறிவுடைய—சுதந்தரமுடைய—சகோதரத்துவமுடைய—தன்ப வாழ்க்கை நீக்கி, இன்பவாழ்க்கையில் வாழக்கூடிய—நல்ல நகர ஜனங்களாக்க முயன்று கொண்டிருக்கின்றன. ஆங்குள்ள தேசநன்மையைக் கருதும் அரசாங்கங்களும், கட்சிகளும், தன்னையே தமது கொள்கையாக வைத்துக் கொண்டு வேலை செய்கின்றன.

ஆனால், நமது நாட்டில் உள்ள இந்த "தியாகிகள்" தேசமக்களை இன்னும் கோழைகளாகவும், அடிமைகளாகவும், சண்டிகளாகவும், மூட நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கச் செய்யவே முயற்சி செய்கின்றார்கள். இம் முயற்சிக்கு ஒன்றுந்தெரியாத ஜனங்களில் சிலர் ஏமாந்து, காங்கிரஸ் தொண்டர் என்பவர்கள் தங்கள் மதச்சின்னங்களுடன், பிச்சைக்கு வரும்போதும், ஓட்டுக்குவரும்போதும் உதவியும் செய்து விடுகின்றனர். ஒன்றுந்தடைசெய்யாமலும், இம்முயற்சியினால் உண்டாகும் லாப நஷ்டங்களை உணராமலும் இருந்து வருகின்றார்கள். ஆகையால் நாம், இந்த நிலை ஒழிந்த ஜனங்கள் உண்மையான அறிவு பெறவும், நாடு தேசம் உண்மையான முன்னேற்றம் பெறவும், எத்தகைய வெற்றிக்கும், தோல்விக்கும், மதிப்புக்கும், ஏமாற்றத்துக்கும் லட்சியம் பண்ணாமல் உழைக்க வேண்டியதே கடமையாகும், தேசாபிமானமாகும். தேசத்திற்கு—தேசமக்களுக்குச் செய்யும் சிறந்த ஊழியமாகும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொண்டு இப்பொழுது இவ்வளவோடு நிறுத்துகின்றோம்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்.

நமது "குடி அரசு" வெளிநாட்டுச் சந்தாரர்களுக்கு 6-12-31ல் வெளியான "குடி அரசுப்" பத்திரிக்கை அனுப்பப்பட்டிருந்தும், நாகை தபால் இலாக்கா அதிகாரிகளால் ஸ்டாம்பு டியூட்டி போதவில்லை என்ற காரணத்தால் எல்லாப்பத்திரிகைகளையும், நமக்கே திரும்ப 10-12-31ல் வாபீஸ் வந்து விட்டது. ஆகையால் வெளிநாட்டுச் சந்தாதாரர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும், 6-12-31ல் வெளியான பத்திரிக்கை கிடைத்திருக்காது.

நிற்க, இவ்வாரம் முதல் வெளிநாட்டு சந்தாரர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும் பத்திரிகை ஒன்றுக்கு முக்கால் அணா ஸ்டாம்பு ஒட்டி அனுப்பவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையால் வெளிநாட்டு சந்தாதாரர்களுக்கு வருட சந்தா ரூபாய் ஐந்தென நிர்ணயித்துள்ளோம். ஆகையால் தற்காலம் இருக்கக்கூடிய சந்தாதாரர்கள், இந்த அதிக தொகையாகிய ஒரு ரூபாயையும் உடனே அனுப்பி வைத்து பத்திரிகையை ஆதரிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

குறிப்பு:— அதிக தொகையாகிய இந்த ஒரு ரூபாயை அனுப்பத்தவரும் சந்தாதாரர்களுக்கு

அவாவர்களுடைய சந்தாத்தொகை உயர்ந்த விகிதப்படி எதிர்வரும் மாதங்கட்கு வருமேல் அதுவரையிலும் தான் பத்திரிகை அனுப்பப்படும். மற்றும் பாக்கியுள்ள சந்தாதாரர்கள் தங்கள் சந்தாத் தொகையை அனுப்பாவிடில் பத்திரிகை கண்டிப்பாய் நிறுத்தப்படும்.

பிரிண்டர் & பப்ளிஷர்,
"குடி அரசு" ஈரோடு.

ஈரோடு முனிசிபல் தலைவர் தேர்தல்.

ஜனப் கே. ஏ. ஷேக்தாவுது போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

12—12—31ம் தேதி பகல் 11 மணிக்கு இவ்வூர் முனிசிபாலிட்டிக்கு தலைவரைத் தேர்ந்தெடுக்க இவ்வூர் டிவிஷனல் ஆபீஸர், கான்பஹதூர், மஹமட் ஜிட்டா சாகிப் அவர்களின் தலைமையில் கூடியது. அதுபோது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்கள் யாவரும் ஹாஜராயினர். புதிய அங்கத்தினர் யாவரும் ராஜஸ்விசுவாசப் பிரமாணம் செய்தனர். பிறகு ஆர். எஸ். விசுவாசம் அவர்கள் இவ்வூர் முனிசிபாலிட்டி ஏற்பட்டதிலிருந்து ஒரு பெண் அங்கத்தினர் கூட இல்லாதிருந்த இச்சபைக்கு ஒரு பெண் அங்கத்தினரைத் தேர்ந்தெடுத்ததைப்பாராட்டிப்பேசி இச்சபைக்கு கே. ஏ. ஷேக்தாவுது தலைவராக இருக்கவேண்டுமென்று பிரேரேபித்தார். அதைத் திரு. கே. அப்துல்ரஹாக் சாஹிப் ஆமோதித்தார், ஒருவரும் போட்டியில்லாததால், திரு. கே. ஏ. ஷேக்தாவுது அவர்களே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைத் திருவாளர்கள், எம். எஸ். முத்துக்கருப்பன் செட்டியார், எம். சிக்கைய நாயக்கர், ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர், கேசவலால் கானிதால் சேட் ஆகியவர்கள் பாராட்டிப் பேசினர்கள். திரு. கே. ஏ. ஷேக்தாவுது சாஹிப் தலைவராக வரமுடியாதபடி எவ்வளவோ சூழ்ச்சிகள், தந்திரங்கள் செய்தும் அவைகள் பயன்படாமல் திரு. ஷேக்தாவுதே தேர்ந்தெடுக்கப் பட்டதை பொதுஜனங்கள் யாவரும் பாராட்டுகிறார்கள்.

மற்றும் இன்று மாலை 4 மணிக்கு ஜனப் கே. ஏ. ஷேக்தாவுது அவர்கள் தலைமையில் முனிசிபல் கூட்டம்கூடி அதில் திரு. வக்கீல் ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் அவர்கள் போட்டியின்றி முனிசிபல் உபத்தலைவராகத்தேர்ந்தெடுக்கப் பட்டாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பட்டுக்கோட்டை திரு. கே. வி. அழகர்சாமி.

12.12.31 தேதி காலை திரு. கே. வி. அழகர்சாமி அவர்கள் ஈரோடு வந்து சேர்ந்துளார். மாலை சேலத்திற்கு விஜயம் செய்து விட்டு இரவு மெயிலில் சென்னைசென்ற திருவாளர்கள் இராமசாமி, இராமகருணன் இவர்கள் ஐரோப்பா பிரயாணவழியனுப்பு உபசார வைபவத்தில் கலந்து கொள்வார். இம்மாதக் கடைசி வாரத்தில் நடைபெற விருக்கும் சென்னை சமரியாதை மகாநாட்டு வேலைகளை நடத்தி விட்டு 1932 ஜனவரி மாதம் முதல் வாரத்தில் சேலம் சுற்றுப்பிரயாணத்தைத் தமது தோழர்களுடன் தொடங்குவார்.

சுவாமி. சிதம்பரனார்.

உயர்திரு. சுவாமி. சிதம்பரனார் அவர்கள் ஒருவாரகாலமாக உடல் நிலை சரியில்லாது, படுக்கையிலேயே இருக்கிறார். இப்போது சற்று குணமாகி வருகிறது.

என்ன சொன்னார்.

"மூன்னேற்றம்"
3—12—31ம் தேதி தலையங்கம்.

மூன்று மாதங்களாய் காந்திஜி உள்படக் கூடிய வட்ட மேஜை மகாநாடு என்ன முடிவு செய்யும் என்ற கேள்வியே இந்தியர் என்போர் அனைவரையும் வாட்டிக் கொண்டிருந்தது. வட்ட மேஜையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்பது கமிட்டிகளுள் பிரதானமான ஐக்கிய திட்டக் கமிட்டி தனது பதாள்தைச் சில தினங்களுக்கு முன்பே சமர்பித்து விட்டது. மற்றோர் முக்கிய கமிட்டியான மைனாரிட்டிக் கமிட்டி தன்னளவில் யாதொரு முடிவும் செய்ய இயலாமல் திரு. மாக்டொனால்டு விடம் ஒப்படைக்கப்பட்டது. மற்ற கமிட்டிகளில் அறியமான சிக்கல்கள் தோன்றவில்லை.

சென்ற சனிக்கிழமை முதல் செய்வாய்க்கிழமை வரை வட்ட மேஜையின் மகாநாடு சம்பூர்ணக் கூட்டம் நடைபெறுகிறது. அக் கூட்டத்தில் ஏறக்குறைய ஐம்பது பிரதிநிதிகள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஐக்கியத்திட்டக்கமிட்டியாதாஸ் தைப்பற்றியே பேசியிருக்கிறார்கள். இவர்களுள் சிலருக்கு ராணுவ சம்மந்தமாயும், வெளிநாட்டு விஷயங்கள் சம்மந்தமாயும், சமஸ்தானங்கள் சம்பந்தமாயும் சிற்சில அபிப்பிராய பேதங்கள் தோன்றியிருந்தன. ராணுவநிர்வாகம் ஒன்று இந்தியாவில் ஒப்படைக்கப்படவேண்டும் அல்லது அதை அடியோடு நீக்கிவிடவேண்டுமென்பது காந்திஜியின் கோரிக்கை. இவ்விஷயத்தில் சாஸ்திரியார், சாப்ரு, ஜெயக்கர் முதலான முக்கியஸ்தர்கள் எல்லாம் காந்திஜியின் அபிப்பிராயத்தை ஏற்கவில்லை. ஆகவே காந்திஜியின் அபிப்பிராயம் வட்டமேஜை மகாநாட்டைத்தில் செல்வாக்குப்பெறுதல் அசாத்தியமாகப் போய் விட்டது.

காந்திஜி இந்தியாவிற்கு ராணுவமே தேவையில்லை எனக் கருதுகிறார். சுதந்திர இந்தியாவின் மீது வெளிநாட்டார் யாரும் படை எடுக்க மாட்டார்கள் என்றும், உள்நாட்டுக் கலகங்கள்உண்டாகாதென்றும் காந்திஜி கருதுகிறார். இந்த அபிப்பிராயம் சரித்திரம் அறிந்தவர்கள் யாராலும் ஒப்புக்கொள்ள முடியாது. உலக்ஸாண்டர் படையெடுப்பு முதல், கோரி முகம்மது படை யெடுப்பு வரையும், பிறபடை எடுப்புகளும், மேல் நாட்டார்கள் எல்லாம் முதலில் மூட்டை தூக்கிப்போட்டுக் கொண்டு வந்ததும் இந்திய மக்களை அடக்கி இந்திய நாட்டைப் பிடித்து ஆளவேண்டுமென்ற எண்ணமில்லாவிட்டால் வேண்டாதச்சரித்திரம் தெள்ளத் தெளிய நிரூபிக்கின்றது. ஆனால் ஆனாலும் இந்தியாவின் கவனமும் இந்தியாவின் மீது செலுத்தப்பட்டதற்குக்காரணம் இந்திய செல்வமேயாகும். உலகில் இயற்கைவளப் பங்கள் பெற்ற நாடுகளில் இந்தியா முதன்மைபெற்று விளங்குகின்றது. இந்திய வறுமை நாடென்பது கருத்தற்ற சொல்லாகும். இந்தியாவின் இரத்தத்தை வெளிநாட்டு வியாபாரமென்னும் மூட்டைப் பூச்சிகளும், மதஸ்தாபனங்கள், மதச்சடங்குகள் என்னும் அட்டைகளும்உருஞ்சிக்கொண்டிருப்பதால் சராசரி 19 பைசாவில் இந்தியன் குடலைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்க்கை நடத்துகிறான். மூட்டைப்பூச்சிகளும், அட்டைகளும் தினந்தோறும் கொழுப்புற்று வளர்கின்றன. இந்தியாவின் இரத்தம் உரிஞ்சப்படுவதைத் தவிர்த்துவிட்டு, எலும்பும் தோலுமாய் வாழும் இந்தியனைக்காரணமாய்க் கொண்டு இந்தியா வறுமையுற்ற நாடெனத் திட்டமிடுதல் எவ்வகையில் பொறுத்தமுடையதென்றுதான் கேட்கிறோம்.

இந்தியர் செல்வத்தை கொள்ளைகொள்ளக்கருதாத தேசம் உலகில் எதுவுமில்லை. கிடைத்தவரையில் ஒவ்வொன்றும் பங்கு போட்டுக்கொள்கின்றன. இங்கிலாந்தில் வெளி நாட்டுப் படை எடுப்புகள் எதுவும் எற்படாதென்று கருதுவதற்கு சற்றேனும் இடமுண்டா? கைபர் கணவாய்க்கு அப்பால் பழைய முகலாய பலமும், உரிமையும் கொண்டுள்ள தேசம் பேபர் சந்தரியார் ஆண்டதில்லி சிம்மாசனத்தைக்கைபற்றினைப்பதில் எதேனும் தவறு இருக்க முடியுமா? யுத்தத்திற்கு முன் ஆகாமதேயமாயிருந்து இன்று இருக்கப் போகிய இடமின்றி வலிய சண்டைகளை வளர்த்துக் கொண்டிருக்கும் ஜப்பான் கண்களுக்கு இந்தியா தேசம் மறைந்தா போய்விடும்? இன்னும்இதைப்போன்றே பிரான்ஸ், ஸ்பெயின், டச்சு முதலான நாடுகளுக்குள்ள பழைய உரிமைகளையும், அவைகளின் ஆசைப்பெருக்குகளையும் விபரித்துக்கொண்டே போகலாம். இதுதான் இப்படி என்றால் உள்நாட்டுக் கலகங்களைப் பற்றி சற்று கவனிப்போம். காந்திஜி யிடமே நேரடியாய்க் கருப்பு புஷ்பங்களை வெகுமதியாய் அளிக்கும் கூட்டங்களும், காதீயம் அழிக, ஒழிக என்றுகூச்சல்போடும் கூட்டங்களும் சுதந்திர இந்தியாவில் மாண்டு மடிந்தா போய் விடும்? இவைகளுக்குமுன்னர் காந்திஜியின் அஹிம்சை தஞ்சாவூர் நாயுடு ராஜாக்களின் அனைச் செடிகள் பட்டபாடுதானேபடும். எனவே சுதந்திர இந்தியா ராணுவமின்றி வாழ்ந்து விடுமென நினைப்பது முற்றிலும் தவறேயாகும்.....

கோவை சமரியாதை வாலிபர் சங்கம்.

6—12—31ம் தேதி ஞாயிறன்று மாலை 7 மணிக்கு இச் சங்கத்தின்வாராந்திரக்கூட்டமொன்று சங்கத்தின் துணைத்தலைவர் தோழர், கே. வைத்தியலிங்கம் அவர்கள் தலைமையில் கூடியது. அதுகாலை அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது:—

"அடுத்து வரப்போகும் இந்த சட்டசபைத் தேர்தலில் அபேக்ஷகர்களாக நிற்கும் சீர்திருத்த உணர்ச்சியுள்ள பொதுஜன ஊழி

ஆதிதிராவிடர் மகாநாடு.

கோயமுத்தூர் ஜில்லா காங்கயந் திற்கடுத்த வெள்ளகோவில் இரண் டாவது ஆதிதிராவிடர் மாகாநாடு நீலகிரிராவ்சாஹிப் வி.ஐ.முனுசாமிபின் னை எம்.எல்.சி அவர்களின் தலைமை யில் 7-12-31ந்தேதி காலை 10-மணிக்கு கூடைபெற்றது. மகாநாட்டிற்கு சாமி.சிதம்பரனார் அவர்களும், உள் ளூர்ப்பிரபலஸ்தர்களும் சுமார் 300 பேர்கட்குமேற்பட்ட ஆதிதிராவிடர் களும், சிலபெண்களும், வந்திருந் தனர். மகாநாட்டிற்குத் திரு. முனு சாமிபின்னை தலைமைவகிக்கவேண்டு மென மகாநாட்டின் காரியதரிசி திரு. பரமானந்தம் அவர்கள் பிரேரேபிக்க திரு. சாமிசிதம்பரனார் அவர்கள் ஆமோதிக்க தலைவர் திரு. முனுசாமி பின்னை அவர்கள் தமதாசனத்தமர்ந் தார். பின்காரியதரிசி திரு. பரமா னந்தம் அவர்கள் சென்ற மகாநாட் டின் வரவு செலவுக் கணக்கையும், ஆதிதிராவிடவாலிபர் மகாநாட்டிற்கு தலைமைவகிக்க இசைந்திருந்த திரு. சாமி. சகஜானந்தம் அவர்கள் உடல் நிலை சரியில்லாது வரமுடியவில்லை என்று எழுதிய கடிதத்தையும் படித் தார். பின்வரவேற்புக்கழகத்தலைவர் திரு. சின்னையன் அவர்கள் தமது வரவேற்புப்பிரசங்கத்தைப் படித்தார். பின்தலைவர் திரு. முனுசாமிபின்னை க்கு மகாநாட்டின் சார்பாக காரிய தரிசியால் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின் தலைவர் தமது முகவுரைப்பிரசங்கம் செய்தார். அதன் சுருக்கம்வருமாறு;-

சகோதரர்களே! இந்தமகாநாடு திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியாரால் ஆரம்பித்து வைக்கப்படவேண்டியதைப் பற்றி நான் கௌரவமடைகிறேன். அவர் தீண்டாதாருக்குச் செய்து வரும் நன்மை கொஞ்சமல்ல. நமது கஷ்டங்களைத்தீர்ப்பதற்காக அவர் படும்பாடு சொல்லிமுடியாது. அவர் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் தேசசன்மை எது என்று நன்கு ஆராய்ந்து தைரியமாய் பாடுபட்டு, இது சமயம் இந்திய சட்டசபையின் உபத் தலைவர் ஸ்தானம் வகித்துவருகிறார்.

'நாம் இதுசமயம் இந்தியாவின் இராஜீய சரித்திரத்தின் மிகவும் முக்கியமானதும் நெருக்கடியானது மான சமயத்தில், இங்கிலாந்தில் இரண்டாவது லண்டன் மகாநாடு முடிவு பெற்று ஒத்திவைத்திருக்கும் சமயத் தில் கூடியிருக்கிறோம். தாழ்த்தப் பட்ட ஜாதியாரின் பிரதிநிதியாக டாக்டர். அம்பேத்கார் அந்த மகாநாட்டில் நமக்குவேண்டிய நன்மை செய்து பாடுபட்டு நமக்குத் திருப்தி காரமாக நடந்துகொண்டிருப்பதை இங்கு குறிப்பிடவேண்டியது அவசிய மேயாகும். முக்கியமாய் நமக்குவே ண்டிய பாதுகாப்புகளும், தனித்தொகு தி கொஞ்சகாலம் வேண்டுமென்றும், ராஜாங்கத்தில் சமஉரிமை அத் தல்து வேண்டுமென்றும், சர்க்கார் உத்தியோகத்தில் தகுந்த பிரதிநிதித் துவம் கொடுக்கப்படவேண்டுமென்றும், சட்டசபை முதலிய பொது ஸ்தாபனங்களில் அதிய பிரதிநிதித் துவம் கொடுக்கப்படவேண்டுமென்றும் வாதாடியிருக்கிறார். இந்திய சரித்திரத்தில் அவருடைய பெயர் என்றும் வழங்கிவரும் என்பதில் சந்தேகமில்லை. இங்கிலாந்திலுள்ள ராஜீயத்தலைவர்களுக்கும், மற்றவர் களுக்கும் நாம் இந்தியாவில் பட்டு வரும் கஷ்டங்களை அவர் சரியாக எடுத்துச்சொல்லியிருக்கிறார். ஜாதி க்கொடுமைக்கு மேல் ஜாதியார் நம் மை ஆழ்த்தி வரும் செய்கைகளை காட்டியுள்ளார். லண்டன் மகாநாடு முடிவு பெற்ற சமயத்தில் முதல் மந் திரி திரு. ராம்சேமெக்டானல்டு சிறு பான்மைக்காருக்கு வேண்டிய பந் தோபஸ்து செய்யப்படுமென்று வாக் குறுதி கொடுத்திருப்பது நாம் மிக வும் பாராட்டத்தக்கவிஷயமேயாகும். நமது கஷ்டங்களை செவ்வனே உணர் ந்து அவர் நம்மிடம் அனுதாபம் காட் டியிருப்பதற்கு நாம் மிகவும் வந்தன மளிக்கக்கட்டுப்பட்டிருக்கிறோம்.

'தாழ்த்தப்பட்டவர்கள் இந்தியர் கள் என்று தெரிந்திருந்தபோதிலும் ஒருதரத்தார் மம்மீது அனுதாபிக்கை கொண்டு நமக்கு எச்சரிக்கைகள் செய்ய ஆரம்பம் செய்திருக்கின்றன. நம க்கு சுதந்திரம் வேண்டும். அதை நாம் விரும்புகிறோம் என்பதில் யா தொருவிதமான சந்தேகமும்மிடை யாது. ஆனால் நம்மைக்கட்டுப்படுத்தி க்கீழ்ப்படுத்தும்படியான சுதந்திரம் நமக்குத்தேவையில்லை.

'தீண்டாமை' என்பது ஒரு சாபத் தீடு. இந்தியா முன்னேற்றமடைய வேண்டுமானால் அது ஒழிய வேண் டியது அவசியம். பம்பாயில் தீண்டா மையை ஒழிக்கச் செய்யப்படுவது போலவே பல இடங்களிலும் செய் யப்பட்டால்தான் தேசம் முன்னே ற்றமடையக்கூடும். இதற்கு கிராம பிரசாரமும் அத்தியாவசியம். நமது ஜனங்கள் ஹோட்டல், காப்பிகிளப், பொது இடங்கள், ஸ்கூல்கள், பாதை கள், வண்டிகள் முதலியவைகளில் சமத்துவமாய் போவதற்கு சௌகரிய மில்லாமல் இருக்கிறது. தர்க்காஸ்து பூமி, வேலைகள் கிடைப்பதிலும் கூட பலகஷ்டங்கள் நமக்கு நேரிடுகிறது. இறந்த மிருகத்தின் உணவு சகாதா ரத்தேடானது. என்று தெரிந்தும் நம்மில் சிலரை இன்னும் சில ஜாதி இந்துக்கள் கட்டாயப்படுத்துவது மிகவும் வெறுக்கத்தக்கதேயாகும். நமது உபாத்தியாயர்களின் நிலைமை சிறப்புற்று நமக்கு நன்மை ஏற்பட வேண்டுமானால் நமது உபாத்தியாயர் களுக்கு பிரத்தியேகமான வ்ருத்தி பண்டு கிராண்டுகள் கொடுக்கப்பட வேண்டும். அப்படிச்செய்தால்தான் பயிற்சிக்கு நம்மவர் வந்து சேருவார் கள். காப்பித்தேயிலை தோட்டங் களில் நமது கூலிகளுக்கு வேண்டிய சௌகரியங்கள் இல்லாமலிருப்பதை நிவர்த்தித்து, அவர்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்யவேண்டும். இது விஷயமாய் சர்க்கார் என்கள் சமூகத் தாரிடமிருந்து அறிக்கைகள் பெற்று தேயிலைத்தோட்டத்தாருடன் கலந்து கஷ்டங்களை நிவர்த்திக்க வசதியிருக் கிறது. நாம் எவ்வளவோ எதிர்த் தும் சமீபகாலமாய் பணக்கஷ்டத்தை முன்னிட்டு லேபர் கமிஷனர் உத்தி யோகத்தை எடுத்துவிட்டார்கள். சேலம் ஜில்லாவில் இப்படிப்பட்ட வேலையை நிறுத்துவது நமக்கு மிக வும் கஷ்டத்தைக்கொடுக்கும். இப் படிப்பட்ட சிக்கனத்தை சர்க்கார் கையாடுவது மிகவும் வருந்தத்தக்கதே யாகும். என்றும் இன்னும்பல அறிய விஷயங்களைப்பற்றி சுமார் ஒரு மணி நேரம் பேசினார்.

அதன் பின் சில ஆதிதிராவிட அன் பர்கள் ஆதிதிராவிட முன்னேற்றத் தைப்பற்றிப் பேசினர்கள். பின் திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் ஆதிதிரா விடர்களின் முன்னேற்றம் எனபது பற்றி சுமார் அரைமணிநேரம் உருக்க மாகப்பேசினார். அதில் திரு காந்தி அவர் கள் தனித்தொகுதியை மறுக்கும் ரக சியத்தையும், வட்டமேஜை மகாநாட் டில் திருவாளர்கள் அம்பெட்கார், சினியாசன் ஆகியோர்களின் ஊழியத் தைப்பற்றியும் பேசினார். பின் மகா நாடு இடைவேளை சாப்பாட்டிற்குக் கலைந்தது.

பின் மாலை 2½ மணிக்கு மீண்டும் மகாநாடுகூடி ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கான சில தீர்மா னங்களும், திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, சாமி சகஜானந்தம் ஆகிய இருவர்களின்உடல்நிலை சீக்கிரம் பூர ணசுகமடைய வேண்டுமென்றும் தீர் மானங்கள் நிறைவேறியது. பின் தலைவர் முடிவுரையுடன் வந்தேமா தரத்துடன் மகாநாடு சுமார் 3½ மணிக்கு முடிவு பெற்றது.

ஆதிதிராவிட வாலிபர் மகாநாடு.

பின்பு மாலை 4 மணிக்கு ஆதிதிரா விட வாலிபர் மகாநாடு முன்பே தலை மை வகிக்க ஒத்துக்கொண்ட திரு. சாமி சகஜானந்தம் எம். எல். சி. அவர் கள் உடல் நிலை சரி இல்லாது வராத தால் திரு. சாமி சிதம்பரனார் அவர் கள் தலைமையில் கூடைபெற்றது. மகா நாட்டை திரு வி. ஐ. முனுசாமி பின்னை எம் எல். சி. அவர்கள் திற ந்துவைத்தார்கள். பின் தலைவர் தமது முகவுரையில் புரட்சி இயக்கத்தைக் கண்டித்தும், வாலிபர் இயக்கத்தின் அவசியத்தைப்பற்றியும், சுமார் ¾மணி நேரம் பேசினர். பின் ஒரு ஆதிதி ராவிட அன்பர் ஒருவர் ஆதிதிராவிட வாலிபர்கள் சத்தியாக்கிரகம் ஆரம் பிக்கவேண்டுமென்றும், காங்கிரசிலு லும், காந்தியிலும் நம்மையில்லை யென்றும் பேசினர். பின் சில தீர் மானங்கள் நிறைவேறியது. தலைவர் திரு. சாமி சிதம்பரனார் அவர்கள் தமது முடிவுரையில் "சத்தியாக்கி ரஹ்" ஆரம்பிக்கவேண்டுமென்று கூற யது சந்தர்ப்பமானதென்றும், பயங்காளி த்தனமென்றும், அஹிம்சை யென்ற பெயரால் ஒருவர் அடிப்பதை பொறு த்துக்கொண்டிருப்பது ஆண்மையில் லாத் தனமென்றும், நம் நாடு இது சமயம் சத்தியாக்கிரகத்திற்கோ, பஹி ஷ்காரத்திற்கோ ஏற்றதல்ல என்ன றும் நம்வாலிபர்களின் மனமானது பயமற்ற தென்றும், இன்னும் சிறிது காலத்திற்கு நமது குறைகளை சர்க்கா ரின் மூலமே தீர்த்துக்கொள்ள வே ண்டுமென்றும், இன்னும்பல விஷய ங்களைப்பற்றி ஓர் அரிய சொற்பொழி வொன்று நிகழ்த்தினர். பின் வந்த ஜோசாரத்திற்குப்பின் மகாநாடு கலை ந்தது, இம்மகாநாட்டை பெரும்பிரய மெடுத்து கூடத்திய திருவாளர்கள் பர மானந்தம், பாக்கிய நாதன், சின்னை யன் ஆகிய வாலிபர்களின் முயற்சி யை பாராட்டுகிறோமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சென்னையில் மாகாண சுயமரியாதைத்தொண்டர் கமிட்டிக் கூட்டம்.

ஷ கமிட்டிக்கூட்டம் சென் னையில திரு. கே. வி. அழகர் சாமி அவர்கள் தலைமையில் இம் மாதக்கடைசிவாரத்தில் சென்னை யில் கூடும். எல்லா அங்கத்தினர் களையும் விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. பல முக்கிய விஷயங்கள் விவாத த்திற்கு வந்திருக்கின்றது. இட மும் தேதியும் பின்னல் அறிவிக் கப்படும்.

வாசுதேவன்
எஸ். வி. லிங்கம்
கே. ராமையா.
கூட்டுக்காரியதரிசிகள்.

"உதிர்ந்தமலர்கள்"

(ஈரோடு C. N.)

கலப்புமணம் ஆகக்கூடாதென்பதல்ல. ஒரு "சூத்திரன்" ஒரு "பிராமண"ப் பெண்ணை மணந்து கொள்ளலாம். எம். கே. காந்தி.

ஃ ஃ

மதமும், ஜாதியும், அடுத்த ஜென்மமும் ஒழிந்தாலொழிய இந்தியப பொருளாதாரத்துறை சீரபடாது. ஈ. வெ. ரா.

ஃ ஃ

சாதி என்பது கடந்த காலத் துப் பொருளாகப் புலனத்து போகிற வறைக்கும் இந்தியா மற்றைய நாகரீக நாடுகளுடன் சமானமாகயிருக்க முடியாது.

ப. மோ. நேரு.

ஃ ஃ

யர்களுக்கு ஆகாவளித்து அவர் கள் தேர்தலில் வெற்றி பெறு மாறு முனைந்துழைக்க வேண்டு மென்று நமது சங்க அங்கத்தி னர்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது" எனகாரியதரிசி எழுதுகிறார்.

கலப்பு மணத்தினாலேயே ஜாதியை ஒழிக்கலாம்.

டாக்டர் மூஞ்சே.

ஃஃ ஃஃ

அரசாங்க வரியைவிட மதவரியே அதிகமாகும். ஆதலால் என் செய்தல் வேண்டும்? ஈ. வெ. ரா.

ஃஃ ஃஃ

இப்பூதாம் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்றால் அறிவுள்ள ஆண்களுக்குக் கல்வியெதற்கு.

எஸ். நீலாவதி.

ஃஃ ஃஃ

இந்தியாவில் சரியான கல்வி இல்லாமல் போனதற்குக் காரணம் மதக்கோள்கையும், கடவுள் செலவுமே யாகும். ஈ. வெ. ரா.

ஃஃ ஃஃ

அவமரியாதையை விலக்கவந்திருப்பதுதான் சுயமரியாதை.

கி. ச. சுப்பையா.

ஃஃ ஃஃ

அக்கிராசனத்துப் பார்ப்பார்களுக்கு ஆரிசன் ஓட்டலில் வேலையிருந்தால், ஆதி திராவிடர்களுக்கு அக்கிராசனத்தில் வேலை இல்லாமலிருக்குமா? கைவல்யம்.

ஃஃ ஃஃ

அரசியல் வாழ்வு என்பது அயோக்கியர்கள் வயிற்றுப்பிழைப்பு. அரசியல் சீர்திருத்தம் என்பது அயோக்கியர்களை உற்பத்தி செய்யும் தொழிற் சாலை.

ஈ. வெ. ரா.

ஃஃ ஃஃ

ஒழியுங்கள் சாதி கட்டுப்பாட்டை—பிறகு இறங்குங்கள் சுயராஜ்யத்திற்கு.

ஆர். கே. ஷண்முகம்.

ஃஃ ஃஃ

ஆஷாடபூதி வேடம் கூடாது. அந்தரங்கப் பித்தலாட்டம் உதவாது. ஒன்றையும் ஒரு மூலையில் செய்யப்படாது. இது ஈசனுக்குத் திருப்தி யளிக்காது.

கைவல்யம்.

ஃஃ ஃஃ

கையாலாகாதவனுக்குக் கடவுள் துணை—அறிவில்லாதவனுக்கு ஆண்டவன் செயல்—தவறுக்கு உணர முடியாதவனுக்குத் தலைவிதி.

ஈ. வெ. ரா.

ஃஃ ஃஃ

அரசியல் சீர்திருத்தத்திற்குப் பிற்பாடு சமூகசீர்திருத்தத்தைக் கவனிப்போம்—சுயராஜ்யம் வந்தபிற்பாடு எல்லாம் பார்த்துக் கொள்ளலாம்—என்பவர்களிடம் "சமூக சீர்திருத்தம் அடைந்தால் அல்லாமல் சுயராஜ்யம் இந்தியாவுக்கு ஒரு காலத்தும் அடையப் போகிறதில்லை" என்றால் பேசுவார்.

பி. சிதம்பரம்.

——

(8ம் பக்கத்தொடர்ச்சி)

விஷயமா? ஆகவே இனிமேல் நீர் யார்? என்னும் விஷயமே மனத்திலேயே நினைக்காமல், உம்மைப்பற்றிய சிந்தனையை அறவே விலக்கி "நீர் யாராயிருந்தாலென்ன?" என்ன அலக்ஷியமாகக் கருதி "அறிவின் பலத்தால் கடமையைக்காப்பற்றி வாழ்ந்தால் நானும் என் சகோதரர்களும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கி, சமத்துவமான இன்பம் எக்காலத்தில் பங்கெடுத்து அனுபவிப்போம். அவ்வாறின்றி உம்மைப்பற்றிய கேள்வியிலும் சிந்தனையிலும் இறங்க இறங்க எங்கள் பகுத்தறிவு எங்களிடமிருந்து விடை பெற்றுக்கொள்ளும். எங்கள் நிலைமையும் நிர்க்கதியாகும்! 'கடவுள்' என்னும் உமது நாமம் எங்கள் அகத்தேயிருந்து அகல்க!

——

(7ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு எத்தனை புத்திரர்கள் இருந்தார்கள்? அவருக்கு புத்திரர் இல்லாதிருந்தும் அவர் எந்த நரகிலும் வீழ்ந்து கஷ்டப்பட்டதாகத்தெரிய வில்லையே! அன்றியும் அவர் சரீரத்தைத் தின்ற சகல பிராணிகளும் நரகத்தைக் கடந்து மோக்ஷத்திற்கே போனதாகவல்லவோ சொல்லப்படுகிறது. மேலும், ஸகன், ஸநந்தனன், ஸநத்குமாரன், ஸநத்சுஜாதன், நாரதர், ஹனுமான், பீஷ்மர் முதலானவர்களும் ஸத்புத்திரனடைந்த தாகவல்லவோ சாஸ்திர புராண, இதிகாசங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளில் எது உண்மை? புராண, இதிகாச, சாஸ்திரங்களிலே ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்குமாறு எந்த சாஸ்திரத்தைக் கொண்டு எதை ஏனைய உண்மை யென்று சொல்லுவது. ஒரு சாஸ்திரத்தில் புத்திரனில்லாதோர் "புத்" என்னும் நரகில் வீழ்வதாகவும், இனி ஒரு சாஸ்திரத்தில் புத்திரனில்லாதோர் நற்கதியடைந்ததாகவும் எழுதிவைத்திருப்பதைச் சுயமரியாதைக்காரர் எடுத்துக்காட்டினால் அவர்களுக்கு நாஸ்திகப்பட்டம் கட்டிவிடுகிறார்கள். அதினால் யாருக்கென்ன நஷ்டம்? ஆகையால், சுயமரியாதை உணர்ச்சியுள்ளவர்கள் புராணம், இதிகாச, சாஸ்திரம் முதலியனவைகளெல்லாம் பொய்யெனத் தெரிந்துகொண்டு புத்திரப் பேறில்லாதவர்கள் "புத்" என்னும் நரகில் வீழ்வர் என்னும் மாய்மோசக்குப் புத்தி கற்பிக்க வேண்டுகிறேன்.

பார்ப்பனர்களைக் கூட்டிகொண்டு வந்து, கருமாதி, காடையத்து, கல்லெடுப்பு முதலியவை செய்து அவர்களுக்கு தானம், பூதானம், சொர்ன தானம் முதலிய சகல தானங்களும் செய்தால் தான் இறந்தவர்களுடைய "ஆத்மா" பிதிர்லோகம் போகும் பாதையில் எந்த இடத்தில் நெருப்பு ஜ்வாலையும், மயிர்ப்பாலமும் இருக்கிறது? அவைகளையெல்லாம் யார் போய்ப் பார்த்துவந்தது? அப்படியே பார்த்திருந்தாலும் இப்போது காட்டமுடியுமா? அப்படியே இருந்தாலும் அந்த மயிர்ப்பாலத்திற்கும் இந்தப் பார்ப்பனர்களுக்கும் என்ன சம்பந்தமுண்டு? இவர்களும் அந்த மயிர்ப்பாலமும் என்ன தயாதிக்காரர்களா? அல்லது இவர்கள் தான் அந்த மயிர்ப்பாலத்தில் சுங்கவரி வாங்கவேண்டிய சண்டாளர்களா? இவர்களுக்குத்தானங்கொடுத்தால் அவை சுலபமே இருப்பதும், இவர்களுக்குத்தானங்கொடுக்காது போனால் அவை அறுந்து விடுவதும் ஏன்? பார்ப்பனர்களுக்கு தானம் கொடுக்காது போனால் மயிர்ப்பாலம் அறுந்து விடுமாலும் இவைகளையும் எத்தனையோ பேர்கள் பார்ப்பனர்களுக்குத்தானங் கொடுக்காமலே தங்கள் பிதுர்களை பிதுர்லோகத்திற்கு அனுப்பி இருப்பதாகச் சொல்லுகின்றார்களே; அப்படியானால் மயிர்ப்பாலம் அறுந்துதானே இருக்கவேண்டும். அப்படி அறுந்த பாலத்தை யார் போய் ரிபேர் செய்து வந்தார்கள்? அல்லது பார்ப்பனர்கள் தவிர மற்றவர்களுக்கு பிதுர்களைப் பிதுர்லோகத்திற்கு அனுப்ப சக்தி இல்லை என்று பார்ப்பனர்கள் சொல்லுகிறார்களா? அப்படியானால் பார்ப்பனரில்லாது தங்கள் பிதுர்களைப் பிதுர்லோகத்திற்கனுப்பும் ஆஸ்திகர்கள் இக்கூற்றை ஒப்புக்கொள்ளமாட்டார்களல்லவா? என்று கேட்கின்றோம். இது வெல்லாம் எல்லாவகையிலும் நாட்டை கெடுத்து அடிமையாக்கி விட்டது மல்லாமல் கருமாதி, காடையத்து, கல்லெடுப்புப்போன்ற வகையிலும் நாட்டையும், நாட்டிலுள்ள மக்களின் அறிவையும் அடிமைப்படுத்த செய்த சூழ்ச்சியே பன்றி வேறில்லை.

கூன் பாண்டியனுக்கு ஏற்பட்டிருந்த சாபத்தைச் சமணர்களால் தீர்க்கமுடியாது போகவே திருஞானசம்பந்தர் "விபூதி" யினால் கூன்பாண்டியன் சாபத்தைத் தீர்த்ததோடு அவர்க்கேற்பட்டிருந்த கூனையும் தீர்த்து வைத்தாரென்றும் ஆனதால், "விபூதி" சகல ரோகங்களையும் சொஸ்தம் செய்யும் ஔஷதமென்றும், பஞ்சபாதகங்களைச் செய்தாலும் "விபூதி" யாவது, வேறு சம்பலாவது மேலேபட்டால்சாலபாவமும் நீங்கிச்சிவனதுகிருபைக்கும் பாத்திரராகிச்சொர்க்கலோக போக போக்கியங்களையும் அடைவார்களென்று புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

கூன்பாண்டியனுக்கு ஏற்பட்டிருந்த சாபத்தைச் சமணர்களால் தீர்க்கமுடியாதபடி திருஞானசம்பந்தரால் "விபூதி" கொண்டு தீர்த்தது உண்மையானால் இப்போதும் அந்த விபூதி இருக்கத்தானே செய்கிறது. அந்த விபூதி கொண்டு இப்போதேற்படும் வியாதிகளையும் சொஸ்தம் செய்யலாமல்லவா? அவ்வாறு சொஸ்தம் செய்ய முடியாதபடி, முன்பு கூன்பாண்டியன் சாபத்தைத் தீர்க்கமுடியாதபடி தோல்வியுற்று வீடியையான சமணர்களின்தொடர்பான கிறிஸ்துவர்களின் உபயபாதங்களிலும் விழுந்ததல்லவா இப்போதேற்படும் ஒவ்வொரு வியாதிகளையும் தீர்த்துக்கொள்ளப்படுகிறது. கமல மதத் தலைவர்களும், மடாதிபதிகளும், மகந்துக்களும், மதத்தைப்பரப்புகின்றபண்டிதர்களும்கூட அந்திறிஸ்துவர்கள் தயவையல்லவா எதிர்பார்த்த வண்ணமிருக்கிறார்கள். அது என்? விபூதியினால் குணம் கிடைக்காது என்று எண்ணிய தாலா அல்லது விபூதியை நம்பினால் கபோதியாக வேண்டியதுதான்" என்ற சுயமரியாதை நீதி வாக்கியத்தின் உண்மையைத்தெரிந்து கொண்டதினாலா? விபூதியாவது, வேறு சம்பலாவதுமேலே பட்டாலும் சர்வபாவமும் நீங்கிச் சொர்க்கலோகம் போகாது. குஷ்ட ரோகம், பெருவியாதி போன்ற கொடிய வியாதிகள் ஏற்பட்டு கஷ்டப்படுவது ஏன்? என்று தான் விபூதி பக்தர்களைக் கேட்கின்றோம்.

——

[6ம் பகுதித் தொடர்ச்சி.]

மறுக்க வல்லார். இவ்வித விபசாரப் பெண்களால் நாட்டிலுள்ள மக்களை மேகாணம், அரையாப்பு, சிரங்கு, மூதலியகொடிய கோய்பற்றிமக்களுயிர்க்கு ஊறுசெய்கின்றது. அதினின்றுதப்புவோரும் கூட நடைப்பிணங்களாய் வாழுகின்றனர். விலைமகளிர்க்காக ஆண்மக்களிற்சிலர்போடும் போட்டியினால் நாட்டிலுண்டாகும் கொலைகளோ அனந்தம். இதனாலேற்படும் போர்களும், பொருளழிவுகளும், பண விரையமும் கற்பிக்கவுலகளும், மருந்திகளும் எனைய கொடுஞ்செயல்களும் அம்மம்மா! சொல்லத்தரமன்று. விபசாரம்காளடைவில் இவ்வுலகிலேயே பலமக்களை எரியாய் நரகடைக்கிடந்தழலும் படி செய்துவிட்டது. விலைமகளிர்வீட்டில்பிறந்த பெண்டிர்ஒருவனைமணந்து ஒழுங்காய் இல்லறம் நடத்தவிரும்பினும் அவர்களை சாதியெறி, சமயவெறி கொண்ட மக்கள் முன் வருத்தினால் அம்மகளிரும் வேறு வழியற்று விபசாரத்தை காட்டப்படியிலதை நீக்க போதியமுயற்சிகள் கடைபெறவில்லை. தற்சமயம் விபசாரத் தொழிலிலீடுபட்டிருப்பவர்தாம்புரியும்தொழில்தீதானதுஎன்று உணர்ந்து அத்தொழிலை விட்டுவிடினும் அவர்களுக்கு வேறு கைத்தொழிலோ, கல்வியோகற்பித்து உணவீய்ந்து காப்பாற்றதக்க அறச்சாலைகள் நிறுவ நமது ஜீவகாருண்யமதம் இடந்தரவில்லை. தலைவர்மனம் விசாலமடையவில்லை. ஜீவகாருண்ய சங்கங்கள் இத்தொண்டிலிறங்க விருப்பப்படவில்லை. பணக்காரர்உளம் இவ்வறப்பயனைப் பெறவிரும் பவில்லை. கொடுஞ் செயல்கள் பெருக நம் ஹிந்து சமயமும், சைவசமயமும் இடங்கொடுக்கின்றதே யொழிய நம்மிடையே வாழும் கிறிஸ்துவர்கள் முஸ்லிம்களிடையே இவ்வியசாரிகள் கூட்டம் பெருகாதிருக்கின்ற காரணத்தையும் ஜீவகாருண்யசமயத்தார் என்று கூறுபவர்கள் ஆராய்ந்துபார்க்கட்டும் அவர்களின் சமயம் விபசாரத்திற்கு எட்டுணையும் இடங் கொடுக்காதிருப்பதுடன் விபசாரம் பெருக காரணமாகவுள்ளசெயல்கள் அனைத்தையும் அச்சமயத்தில் வேருடன் களையப்பட்டிருக்கிறதென அறிந்து பெண்களிடத்தில்-இல்லை- இந்தியாவினிடத்தில் ஜீவகாருண்யம் காட்டி விபசாரத் தொல்லையையொழிக்க சமயத்தலைவர் முன்வருவாராக.

(தொடரும்)

(5ம் பக்கத்தொடர்ச்சி)

பாய் இருப்பார்கள் என்பதை இந்தக்கதையின் சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தக்கது. தென்அமெரிக்கர்கள் தங்கள் கடவுளாகிய ஒரு நட்சத்திரக் கணத்திலிருந்து தாங்கள் வந்ததாகவும், இந்ததாராகணம் மறைவுள்ளகாலத்தில் தங்கள் பிதாவாகிய கடவுள் நோயால் வேறுபடாமல் இருப்பதாகவும் சொல்லுகின்றார்கள்.

கால்முக்ஸ் [Calmucks] என்ற கூட்டத்தார் ஆதிமனிதன் பிரகாசிக்கும் முகத்துடையவனுய் ரெக்கைகளுடன் பரந்து கொண்டிருந்தானும்! ஏனல் கடவுள் கட்டளைக்கு மாறுக நடந்த படியால் ரெக்கை கழன்று உலகில் நடக்க ஆரம்பித்தானும்!

செமுநோய் [Semunoi] இந்தியர் வேடிக்கையான கதை ஒன்றைச்சொல்லுகிறார்கள், கடவுள் உலகத்தைப்படைத்து மூன்று அழகிய மனிதரைச்செய்து அவர்களை ஒரு குளத்தில் குளிக்கச்சொன்னாராம். சுத்த மானதண்ணீரில் குளித்தவன் வெளுப்பாகவும், அழுக்குத்தண்ணீரில் குளித்தவன் கருப்பாகவும் ஆனார்களாம். அவர்கள் மூன்று மூன்று பெட்டிகளை வைத்துத்திறக்கச்சொல்லவும் முதலில் திறந்தவனுக்கு கம்புவில்லும், இரண்டாவது திறந்தவனுக்கு உளியும்சம்மட்டியும், மூன்றாவது திறந்தவனுக்குக் காகிதம் பேனாவும் கிடைத்தனவாம். அதுமுதல் அந்தந்த தொழிலாளிகள் உற்பத்தியானார்களாம்!

சீனர்கள் சொல்லும் கதை வேடிக்கையாக இருக்கும். ஒரு பெரிய முட்டையிலிருந்து தங்கள் கடவுள் உற்பத்தியானார். அவர் பெயர், பூன் கூவாங். முட்டையின் மேல் பாகம், வானமாகவும், அடிபாகம், பூமியாகவும் ஆயிற்றும். கடவுள் தனது வலது கையால் சூரியனையும், இடது கையால் சந்திரனையும் நட்சத்திரங்களையும் சிருஷ்டி செய்தாராம். அதன் பிறகு ஐம்பூதங்களையும் (அப்பு, பிரதிவு, தேயு, வாயு, ஆகாயம்) படைத்து இரண்டு மேகங்களை எழுப்பி, பொன்னிலிருந்து எழுந்த மேகத்தை ஆணுருவமாகவும், கட்டையிலிருந்து எழுந்த மேகத்தை பெண்ணுருவாக்கியும், இவ்விரண்டு உருவங்களின் சையோகத்தால் ஏற்பட்டது ஆணும் பெண்ணுமாம்! பிறகு இவ்விருவரிலிருந்து மனித சந்ததி உற்பத்தியாயினராம். இதைப்போன்ற விநோத வேடிக்கை சிருஷ்டிக்கதை ஒன்றைக்கிறிஸ்துவப்பாதிரிமார் சொல்லுகின்றார்கள். களிமண்ணைக்கொண்டு மனிதனையும், அவன் பக்கஎலும்பைக்கொண்டு பெண்ணையும் செய்து, அவர்கள் மூக்கில் தனது காற்றை ஊதி உயிர்ப்பித்தார் எனவும் சொல்லுகின்றார்கள். இதுவோர் ஜால வித்தையாக எண்ணவேண்டி வருகிறதேயொழிய, பராபர வஸ்துவின் காரிய மென்று எண்ண முடியவில்லை.

கால்டியன் (Chaldean) அஸ்ஸீரியன் (Assyrian) கூட்டத்தார், ஆதிநாகரீகத்தை அடைந்தவர்களில் இருவர். இவர்கள் சுமார் 50,000 வருஷங்களுக்கு முந்தி வாழ்ந்தவர்கள். இவர்களின் கடவுள், பற்பல ஆபாசத் தொழில்களைச் செய்து வந்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளை இவ்விடத்தில் வரைவது அனுவசியம். இந்தக்கதைகளாயாவும், சைவர்கள் சொல்லும் கதைகளாகிய, தங்கள் சிவனுர், சூரியனை உதைத்தும், சந்திரனைப்பல்லைப்பிடுங்கினர், என்றதை பொக்கும்.

சகல மதஸ்தர்களும், கடவுளுக்கு சிருஷ்டி செய்யும் வேலையைத்தவிர, மற்ற வேலை எதுவும் செய்வதில்லை என்றுகருதினர்கள் போலும். எனெனில் வேதங்களும், புராணங்களும், சிருஷ்டியைக் குறித்தே முக்கியமாகப் பேசுகின்றன. விவிலிய நூலிலும், நமது திருவிளையாடல் புராணத்திலும், சிருஷ்டி செய்த பிறகும் சில ஆண்டுகளாக, தங்கள் கடவுள், மனிதருடன் கூடி விளையாடி வந்ததாகத் தெரிகிறது. இதனை எழுதிவுள்ள புஸ்தக ஆசிரியர்கள் தங்கள் கடவுளை மனித உருவத்தைப்பொச்செய்தாகிலும், அல்லது அசரீரீ வாக்கு முதலிய மறைந்த ஆதாரங்களாலும், இவ்வுலகில், தங்கள் கடவுள், வேலை செய்து வந்ததாகச்சொல்லுகிறார்கள். கடவுள், பகுத்தறிவு இல்லாதாரிடம் அக்காலங்களில் காட்டிய மகத்துவங்களை, தற்கால அறிஞர்கள் முற்காட்டி, அவர்களை, தான் இருப்பது உண்மை என நம்பச் செய்யலாகாதா? இந்த விஷயமாக செய்து வரும் ஆராய்ச்சிகளில், கடவுள் ஒருவரோ, பலரோ, இருப்பார்களேயாமாலும், தான் இருக்கும் விஷயத்தை மாத்திரம், தற்கால அறிஞர் முன் காட்டியிருப்பார்கள். மதஸ்தர்கள் கூறும் கடவுளர் இல்லாமையால்தான் அவர்களுடைய வேலையை இன்னதென்று சொல்ல முடியவில்லை என்று யூகிக்கவேண்டிவருகின்றது. இதன் சம்பந்தமாக இன்னேரு கேள்வியுமுண்டு. சிருஷ்டி ஒன்றைத்தானு செய்தார். சிருஷ்டி செய்வித்து அதன் பிறகு மனிதர்களுக்கு உதவியாகவோ அல்லது அவர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு என்ன வேலை செய்து வருகின்றார்? அவனை இல்லை என்ற நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாக்க, ஆஸ்திகளார்க்க என் கடவுள் அவர்கள் முன்பிரசன்னமாகலாகாது? இருந்தாலன்றே, பிரசன்னமாவார்! இத்தியாதி கேள்விகளுக்குத் தக்கவிடை யாரும் கொடுத்தாரில்லை. விடை கொடாமையால், மதஸ்தர்கள் கூறும் கடவுளும், அவருடைய திருவிளையாடல்களும், வெறும் கற்பனைகளெனக் கருதவேண்டியதன்றி என்னதடை?

மனிதர், தனிவாழ்க்கையிலாகிலும் சமூக வாழ்க்கையிலாகிலும் பிரத்தியட்சமாகக் காட்டாவிட்டாலும், அனுமானிக்கவாவது, கடவுள் எதையாவது செய்து வருகின்றாரா என்று பார்ப்போம்.

நாம் பிறந்தது முதல் சாகும் வரை, நமது பெற்றார், உற்றார் உடன் பிறந்தார் மற்றுமுள்ள ஜனசமூக மக்களை விட, கடவுளாவது, தெய்வங்களாவது நமக்கு உதவி இருந்ததாகத் தெரியவில்லை. காலை முதல் இரவு வரை இரவு முதல் காலை வரை நமக்குத் துணையாய் நிற்கின்றவர்கள் நம்மைப் போன்றவர்களைத் தவிர மற்றபடி யாருமிலர், நமதுமுயற்சியால் எதுவும் திருவினையாகின்றதே யொழிய தெய்வத்தால் அல்ல.

நம்முடைய தினசரி யுலைவுவங்களும், தாய் தகப்பன் மூலமாக வந்த சக்தியால் கவனிக்கின்றன. வாய் பேசுவதும், கண் பார்ப்பதும், காது கேட்பதும், மூக்கு நுகர்வதும், நாக்கு ருசிப்பதும், தொண்டை விழுங்குவதும், தினப்பை ஜீரணிப்பதும், மற்றும் பல இந்திரியங்கள், மற்றும் பல தினசரி உருப்புகள் செய்து வருவதும், தாய் மூலமாக வந்த சக்தி (Energy) யால் அன்றி, வேறேர் கடவுளால் அல்ல. இது தான் பிரத்தியட்சக்காட்சி இதையாரும் மறுக்க முடியா.

நோய் வந்தாலும், அந்நோய்களுக்கு, நமது தினசரித்திலுள்ள கிருமிகளால் ஆவது, அல்லது, வெளியில் இருக்கும் கிருமிகளால் ஆவதே யன்றி, நமது மெய், வாய், கண் முதலிய அவயவங்களுக்குப் புலப்படாத கடவுளால் அல்ல. என் வீட்டில் கிருஸ்துவ மார்க்கத்தைக் கற்பிக்கும் இரண்டு படங்கள் உள. அதில் இரண்டு குழந்தைகள் தண்ணீரில் மூழ்கிப் போகும் சமயத்தில், இரண்டு கந்தர்வர்கள் அதனைத் தடுத்துக்காப்பாற்றும்காட்சியைக் குறிப்பித்திருக்கிறது,

ரோஜா முத்தை
ராய்ச்சி நூலக அற

ஆனல் ஒரு நாளைக்கு அனேக குழந்தைகள் கிணற்றிலும், ஆற்றிலும், குளத்திலும், வெள்ளத்திலும் மூழ்கி சாகின்றதைக் கடவுள் தான் ரூபங் கொண்ட கடவுளர் அவ்விதமாக மாளாமல் சிறு குழந்தைகளைக் காப்பாற்றுத காரணம் என்னவோ? குற்றம் இன்ன தென்றும் தெரியாத அச்சிறு குழந்தைகளைக் காருண்யக் கடவுளர் கை விட்ட தென்னை? தனக்கு வேண்டியவர்கள் ஒருவர் அபாயத்தினின்று மீட்கப்பட்டால், அது கடவுளருளால், அபாயத்தினின்று மீட்கப்படாத ஆயிரத்தனைக்கானவர்களுக்கு கடவுள் அருள் எங்கு போயிற்று. ஒரு மோட்டார் வண்டி விரைவாக ஓடும் அபாயத்தினின்று தப்பித்த ஒருவன், கடவுளருளால் தப்பித்துக் கொண்டேன் என்கின்றான். ஆனல் வருட மொன்றுக்கு 6000 பேர் மோட்டார் வண்டி ஆபத்தில் அகப்பட்டு மாளும் நிகழ்ச்சியை அந்தக் கடவுள் என் தடுக்கவில்லை? ஒரு அபாய சம்பவத்தில் பலர் மாண்டது அபாயத்தாலாம்! ஆனல், ஒருவன் தப்பித்துக் கொண்டது கடவுளாலாம்!! இது என்ன யுக்தியோ, அல்லது குயுக்தியோ, அதனை அறிஞர்களே அறிதல் வேண்டும். தான் கோரிய விஷயங்களில் ஒன்று கூடி வந்தால் அது தெய்வத்தால் என்று எண்ணுகிறார்கள். ஆனல் கோரிய 99 விஷயங்கள் கை கூடாமைக்கு யார் காரணமோ அதனை கவனிப்பதில்லை. கப்பல் முழுகும் போது, அதிலிருந்த சில கொலையாளிகள் தப்பித்துக் கொண்டால் அவர்களையும் தெய்வந்தான் காப்பாற்றியதோ! பக்தர்கள் ஞாயப்படி, அதுவும் கடவுள் அருளாய் இருந்தாலும் இருக்கலாம்! எப்படி ஞானில், திருடப் போன எலிக்கு மோட்சம் கொடுத்த ஈசன் கொலையாளிகளை என் தப்பித்துவைத்திருக்கக்கூடாது! கடவுள் என்னவேலை செய்கின்றார் என்ற கேள்விக்குப்பதர்கள் திருப்தியமான விடை கொடுப்பதாகத்தெரியவில்லை. அவர் செய்ததாகச்சொல்லும் வேலைகள் பக்தர்களுக்குள்ளேயே உடன்பாடில்லாமலிருக்கின்றன. இதையாரும் நடாவுவதற்கு இடமில்லை. உலகத்தைச்சிருஷ்டித்த மாதிரியும் மனிதனைச்சிருஷ்டித்த மாதிரியும் ஒருமதஸ்தன் சொல்லுவதுபோல மற்றோர் மதஸ்தன் சொல்லுவதில்லை. செய்ததாகச் சொல்லும் காரியங்கள் யாவும் விளையாட்டுக்களையாக இருக்கக் கண்டோம். கழைத்கூத்தாடிகளும், கடவுள் செய்ததாகச்சொல்லும் செயல்களைவிட ஆச்சர்யகரமான விளையாட்டுகளைச் செய்கின்றார்கள். ஒரு கண்ணிமைப் பொழுதில் மாங்காய் வித்திலிருந்து, செடியும், கிளைகளும், பூவும் காயும், பழமும் உண்டாகிக்காட்டுகின்றார்கள்! இதைவிட ஒரு நாளில் இவ்வுலகை சிருஷ்டித்தார் கடவுள்' என்று சொல்வதால் கடவுளுக்கு என்ன சிறப்பு? இந்த விசாரணையில் கடவுளுக்கு எந்த வேலையும் இருப்பதாகவாவது, அல்லது அவர் செய்ததாவது விளங்கவில்லை.

பொதுக்கூட்டம்.

1-12-31ந்தேதி இரவு 10 மணிக்கு கள்ளிக்கோட்டை சுகாதாரபரம்பில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மருத்துவர் வாசகசாலையின் பொதுக்கூட்டமொன்று திரு. கலியபெருமான் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் திரு. எம். எஸ். நாதன் அவர்கள் தனித்தொகுதியின் நன்மையைப்பற்றியும், கூட்டுத்தொகுதியின் புரட்டைப்பற்றியும் விளக்கி தென்னிந்திய மருத்துவர் சங்கத்தின் தலைவர் பண்டிட் எஸ். ஆனந்தம் அவர்களின் ஜாதியத்தைப்பற்றிப்பாராட்டியும் பேசியபின் சென்ற 25-11-31ந்தேதி தனித்தொகுதியை ஆதரித்து லண்டனுக்கு செய்தியனுப்பிய தென்னிந்திய மருத்துவர் சங்கத்தலைவர் இவ்வாசகசாலையார்கள் பின்பற்றுவதாகவும், நன்றியாராட்டுவதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கண்ட தீர்மானத்தை தலைவர் பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களுக்கு தந்திமூலம் அனுப்பப்பட்டது எனக்காரியதரிசி எழுதுகிறார்.

வங்காளம் தயாராகவில்லை!

திரு. சுபாஷ்சந்திரபோஸ் அபிப்பிராயம்.

வங்க மாகாணமகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் முக்கிய தீர்மானத்தில் 'போரை'ப் பற்றிக்குறிப்பிடவில்லையென்று பலர்முறைகூறினர் அப்போது திரு. சுபாஸ்சந்திரபோஸ் வங்மாகாணத்தில் எந்தஜில்லாவும் இப்போதுசட்டமறுப்புத்தொடங்குவதற்குந் தயாராயில்லை யென்றும், ஆயினும் இப்போது சுமர்ப்பிக்கப்பட்டதினுல் அதற்கில மாதங்களுக்குள் அம்மாகாணம் அதற்குப்பூரணமாகத்தயாராவதற்கு வழியேற்படுமென்றும்கூறினர், வங்காளத்தில் கிராமாந்தரங்களில் குத்தகைகளும் வரிகளும் கொடுக்காமல் சத்தியாக்கிரகம் புரியவேண்டுமென்று கொண்டுவரப்பட்டதீர்மானத்தை மகாநாட்டின்பிரதிநிதிகள் நிராகரித்துவிட்டனர்.

திரு. லாயிட்ஜார்ஜும் பிச்சைக்காரரும்.

பம்பாயில் திரு லாயிட் ஜார்ஜ் ஹார்ன்பை ரல்தாவழியாக நடந்து சென்றபொழுது நடந்த நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. அவர் தமதுமனைவியும் குமாரியும் பின் தொடரமோல்ஸ்டேஷனுக்குச் செல்லும் போது ஒரிட்டமே கம்பெனியை அணுகிய தும்டிஸ்ரவரைக்காரைநிறுத்தச்சொல்லி ஓரியண்டல் மாளிகைவரைநடந்து சென்றலானர். அவர்ஓர்குழந்தையைப் போன்ற பாவத்தையும் ஆச்சரியத்துடன் நோக்கினர். தாம்பார்த்தனவற்றை மனதில் பதியவைத்துக்கொண்டார். அவர்முகத்தையாவரும் அறிந்து கொள்ளாமலிருப்பதற்கில்லை. அவர்நடந்து செல்வதானசெய்தி கிடைத்ததும் மாலரும் அவரைச்சுற்றிக்கூடலாயினர். அவர் ஓர் வெற்றிலைப்பாக்குக்கடையண்டை வந்துநின்றார், கடைக்காரன் வெற்றிலை மடிப்பதைச்சிறிதுகவனித்துக்கொண்டிருந்தார். ஓர்மிட்டாய்க்காரன் மிட்டாய்த்தட்டிலேன் பாடிக்கொண்டு போவதைக்கண்டார். அவர் அவனை அனுகி அனைரியாத விதமாகத்தட்டிவிருந்து மிட்டாயை எடுத்தார். அவ்வளவுதான் தாமதம். மிட்டாய்க்காரன்திரும்பி ஞ்ஞ. லாயிட் ஜார்ஜ்ஜை களவாணி என எண்ணி கோபத்துடன் கேட்டிஞ்ஞ. ஆனல் அவன் தான்கினைத்தது தவறென்பதாகப் புரியவனிதன் ஓர் அரசியல்வாதி என்பதை அறிந்தான். மிகவும் ஆச்சரியமடைந்தான். பக்காத் திருடராகக் கொள்ளப்பட்ட திரு. லாயிட் ஜார்ஜ் சிலபொன் நாணயங்களை மிட்டாய்க்காரனிடம் கொடுக்க அவன் அதனை சந்தோஷத்துடன் எற்றுக்கொண்டான். இதுசெய்தியறிந்த பிச்சைக்காரர்களெல்லாம் அவரைச் சூழ்ந்துகொண்டனர். அவர்கள் யாவருக்கும்அவர் பொன் நாணயம் வழங்கினர். பிச்சைக்காரர்கள்கூட்டம் அதிகரிக்கவே தம்மால் சமாளிக்க முடியாதெனக் கண்ட அவர் காரில் ஏறிக் கொண்டோட்டம்பிடிக்கலானர். கூட்டத்திலிருதோர் காரோகம் செய்தனர்.

மதுரையில் சுயமரியாதை திருமணம்.

1-12-31ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை சுமார் 4 மணிக்கு மதுரை விக்டோரியா எட்வர்டு பார்க்குக்குத் தெற்கே சான்சாமேட்டுத் தெருவில் ஷையூர் பிரபல சுயமரியாதை இயக்க வீரர் ஏ. வீராச்சாமி அவர்கள் தலைமையில் விருதுநகர் சித்தியானந்த வாசகசாலையின் தலைவரும், சுயமரியாதை வண்பரும், பிரபல வியாபாரியுமான திரு. கே. கந்தசாமி அவர்களுக்கும், ஷையூர் திரு. சாமிநாத நாடார் அவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி ராஜாமணி அம்மாளுக்கும் கடைபெற்ற திருமணம் சுயமரியாதை முறையில் மூட பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து தாலி என்னும் அடிமைச் சங்கிலியை அறவே நீக்கி, மணமகனும், மணமகளும் மேல் நாட்டு நாகரீக முறைப்படி மலர்மாலையை மட்டும் மாற்றிக்கொண்டார்கள். அது சமயம் திரு. எ. வீராச்சாமி அவர்களால் சுயமரியாதை இயக்கம் என்பது பற்றியும், திரு. எஸ். பி. நாராயண் அவர்களால் மக்களின் மூட பழக்கம் என்பது பற்றியும், திரு. ஜே. எம். கிருஷ்ணமாச்சாரி அவர்களால் சுயமரியாதை திருமணத்தைப் பற்றியும் நீண்டநேரம் பேசினார்கள். ஆண்களும் பெண்களுமாக சுமார் 300 ஜனங்கள் வரை விஜயம் செய்திருந்தார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.

தாய்மொழியுடன் இணைக்கப்பட்டு இனசரி துணிவத்தை உபயோகிக்கலாம் சலவையும் செய்யலாம். வருஷக் கணக்கில் உபயோகிக்கக்கூடியது. கம்பி அல்லது குண்டஞ்சுகளையுள்ளது.

	ரூ. அ.
2½ வீதி 5 முழம் பட்டு 1க்கு	1-10
ஷேடஜன் 1க்கு	17-0
2¼ 5 முழம் பட்டு 1க்கு	1-6
ஷேடஜன் 1க்கு	15-0
3 வீதி 8 முழம் வேஷ்டி 1க்கு	3-8

S. K. R. வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,
தென் இந்தியா

சுயமரியாதைத் தலைவர்கள்.

நமது இயக்கத் தந்தை பெரியார் உயர்திரு. ஈ. வெ. ரா. இயக்கத் தலைவர் உயர்திரு. W. P. A. சௌந்திர பாண்டியன் இவர்களின் போட்டோ பேட்ஜ்கள் (Photo Lockets) 1" இஞ்சி 1 1¼" இஞ்சி ரவுண்டு சைஸ்களிலும் உயர்திரு இராமசாமிப் பெரியார் அவர்களின் டேபிள் போட்டோ Photo Medallion oval size with Easel) 5" X 3 5/8" சைஸில் ஒவ்வொரு சுயமரியாதை இயக்க அன்பர்களின் டேபிள்களின் பேரிலும் அமர்ந்து உற்சாகத்தை ஊட்டும் முறையில் தயாராகி வந்துவிட்டது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

அ. ப. அர்த்தனரி & பிரதர்,
ஜலகண்டபுரம். (சேலம் ஜில்லா)

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மூட நம்பிக்கையுடனும் அவைகளைக் கருதுவதைத்தான் நாம் எதிர்த்துப் போராடுகின்றோம். மக்கள் இன்புற்று, ஆனந்தமடைவற்கு விர்ஜில் என்பவரால் இயற்றப்பட்ட "ஈனை யிட்" என்னும் நூல் மிக்க அழகாகத் தான் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இக்காரணத்தைக் கொண்டே, அப்புஸ்தகத்தை எதாகிலும் ஓர் இடத்தில் திடீரெனத் திறந்து, கண்களுக்கு முதலில் தென்படும் வாக்கியங்களை வாசித்து, அதன் மூலியமாக ஜோசியங்கள் அடிக்கடி மத்திய காலங்களில் கூறப்பட்டு வந்ததானது நியாயமான முறைமையாகவே யாகாது. இம்மாதிரியாகவேதான் இந்தியாவில் வசிப்பவர்களாலும், ஹிந்துமத சம்பந்தமான புஸ்தகங்கள் யாவும் கையாளப்பட்டு வரப்படுகின்றன. மதசம்பந்தமான யெண்ணங்களோ இப்புஸ்தகங்களினின்றும் அதையே யொழித்து நமது பகுத்தறிவினுதவியினால் இவைகளை ஆராய்ச்சி செய்வோமேயானால், அப்பொழுது இப்புஸ்தகங்களில் எவ்வளவுதான் அழகாக வர்ணித்துவரைத்திருப்பதாகக் காணப்படும். பழைய காலங்களுக்கு மக்களைத் திரும்பக் கொண்டுபோவதனாலேற்படும் நன்மைகளைக்காட்டிலும், மக்களுக்குப் பகுத்தின் மடங்கு ஊக்கமும், முயற்சியும், வீரமும், சுதந்திர உணர்ச்சியு மேற்பட்ட சாதனங்கள் உண்டாகும்.

மேலும், இதர வகுப்பினர்களால் பரிசுத்தமெனவும், மதசம்பந்தமான வைகளெனவும் கருதப்படும் புஸ்தகங்கள் யாவையும் எல்லா வகுப்பினர்களும் கற்று, அவைகளையும் ஆராய்ச்சிசெய்து, அவைகளில் காணப்படும் நன்மைகளை நாம் பின்பற்றுவதால் நமக்கு எதாகிலும் அதனால் பிரயோஜனமேற்படுமா யென்பதையும் நாம் கவனித்தறிய வேண்டியது யோசிக்கத்தக்க விஷயமே யாகும். நாம் இம்முறையைப் பின்பற்றுவதனால் நமது அறிவும், ஆராய்ச்சியும் விர்த்தியடைந்து வருவதுடன், நமது வகுப்பினர்களால் மதபுஸ்தகங்களெனவும், அவைகள் பரிசுத்தம் வாய்ந்த வைகளெனவும் கருதப்படும் எல்லாப்புஸ்தகங்களையும் இதர வகுப்பினர்களும், மதவித்தர்களும் கற்று, அவைகளை ஆராய்ச்சி செய்தால் நமது மனதும் அப்பொழுது அவர்களுடைய செய்கைகளினால் பாதிக்கப்பட்டு, புண்படாதென்பது உறுதியே யாகும்.

(3ம பக்கத்தொடர்ச்சி)

லாமல் பசியுள்காற்றால் சமாதானப்பட்டுப்பால்முகூர்த்தமானால் ராத்திரியும், ராத்திரிமுகூர்த்தமானால் சாயங்காலமும்போலும் சோற்றை உண்டு களிப்பார்கள். சில கலியாணத்தில் வயிறு சிரையாமல் போனலும் போகும். சில கலியாணத்தில் திட்டு முண்டு. சிலகலியாணத்தில் உதையுமுண்டு. சிலகலியாணத்தில் வயர் பிறைத்து அதற்குமேல் சோறு சொடுக்கும் தயாளகுணமுள்ளவர்களுமுண்டு, மொச்சப்பருப்போடு அவர்கள் சாப்பாடுமுடிந்துவிடும். ஒரு பாடும்உபகாரமில்லாத பார்ப்பார்களுக்கோ பலகாரம் பாயசத்துடன்சாப்பாடும், காப்பியும், தெகூணையும் அவரவர்கள் குறிப்பு அந்தஸ்து, பணத்திற்சக்தி, எண்ணத்தின் பெருமை முதலியவை களுக்குத்தக்கபடியும் சிலசமயம் அதற்குமீறியும்கடக்கும்.

தமிழர்கள் பார்ப்பார்களின்தருமசாஸ்திரங்களை ஆராய்ந்திதாலும் அதில் சொல்லப்பட்ட தத்வாயு, பிரதிப்ரஸ்தாதா அக்நீத்ரன், போதா உத்காதா, சமிதா, முதலியதேவப்பு ரோகிதர்களுக்கும்,வேதத்தைச் சரியாகக்கற்றவன், ஒழுக்கத்தில்சிறந்து தவ ஸயனடைந்தவன், மோக்ஷத்திற்காக த்தன்னாழ்க்கையைச்சுருக்கி அதன் வழிகிற்பவன், உலக உபகாரமாக உபதேசம் செய்கிறவன் முதலியபிரா மணதருமத்தை அனுஷ்டிக்கும் பார்ப் பார்களுக்குத் தானமும், தெகூணை யும்,சாப்பாடும் கொடுக்கவல்லிருஷிகள் என்னும் தருமசாஸ்திரத்தில்சொல்ல ப்பட்டிருக்கின்றன. அப்படியுமில்லா மல் பள்ளிப்பார்ப்பார், சணக்குப்பார்ப் பார், தோஷிப்பார்ப்பார், விதாரப் பார்ப்பார், சமயக்காரப்பார்ப்பார், சிபாருகுப்பார்ப்பார், இவர்களுக்குத் களானபார்ப்பார், காடோடிப்பார்ப் பார், சேவுகாவிர்த்திப்பார்ப்பார், கெட் டிப்போனபார்ப்பார் இவர்களுக்குத் தெகூணையும்சாப்பாடும் கொடுக்கப் படுகின்றன. இவர்களைத்தருமசாஸ்தி ரம் பிராமணர்களில் பிரஷ்டர்களென் றுசொல்லுகின்றன. இவர்களுக் குத்தானமோ, தெகூணையோகொடுப் பவனுடையஉயர்தகிலும் கெட்டு, கொடுத்தவனும்,வாங்கினவனும்நரகத் தையடைவார்களென்று பிராமணனு க்குக்கொடித்தால் புண்ணியமென்று சொன்னதருமசாஸ்திரமான பராசர ஸ்மிருதியில் சொல்லியிருக்கின்றன. இதுதான்சொல்லுவதல்ல கலியுகத்தி ற்குப்பிரமாணமென்று சொல்லப்பட் டபராசரஸ்மிருதியின் ஆசாரகாண்ட த்தில் தானபாக்ரமம்சொன்ன அத்தி யாயத்தில் சொல்லப்பட்டிருப்பவை களாகும். இதை ஆலோசிக்காமல் ரா ஜபுரம்சபைவிட்டு விட்டதாலும் அத ன்முக்கியஸ்தர்களே இதிற்பற்றுதலு டையவர்களாகவும் இருப்பதால் இதை அவர்களுக்கே ஞாயகப்படுத்து கிறேன்.

அதவுமில்லாமல் இறந்து போன வர்களின் கார்யங்கள் மூன்றுநாள் கருமாந்திரத்தோடுமுடிந்தது. வருஷத்தில் சொருநாள் படைப்புபோட்டு பெரியவர்களுக்கும்பிட்டு பந்துக்களு டன்உண்பதே சொக்குவழக்கம். இப் பொழுது சிலபெரியகுடிப்பங்களிலும் அவர்களைப்பின்பற்றின சிலகுடும்பங் களிலும் பதினாலுநாள் தீட்டென் றும், அதற்குப்பின் கருமாந்திரமென் றும்,அதற்குப் பல தானங்களும், திதி யென்றுமிரார்த்தமென்றும்பலபார்ப் பார்களுக்கு அரிசிபருப்பு அதற்குவே ண்டிய சாமக்கிரியை,சொம்பு,வேஷ்டி தெகூணை முதலியதானங்கள் செய்து வருகிறார்கள். பிதிர்க்கள் எங்கிருக்கி றார்கள், இருப்பார்கள் என்பதை ஆ லோசித்துப்பார்ப்போம்.நரகத்திலோ, சொர்க்கத்திலோ இருக்கவேண்டும். அல்லது மருஜென்மமெடுத்திருக்க வேண்டும். அல்லது பஞ்சூதத்திலா வது கடவுளிடத்திலாவது கலந்து போயிருக்கவேண்டும். இந்தஐந்திட மல்லாமல்வேறு எங்காவதிருக்க இட முண்டா? பார்ப்பானுக்குக் கொடுப்ப தைப்பிதிர்தேவதைவாங்கிசமஸ்த பிதிர் களுக்குக்கொடுக்கிறார்கள் என்றல்ல வா பார்ப்பார்கள் சொல்லுகிறார்கள். நமது பிதிர்க்களெல்லாம் நரகத்திலி ருப்பதாக நாமெதற்குச் சொல்லவாட் டோம், நரகத்திலிருப்பதாக வைத்து க் கொண்டாலும் பார்ப்பானுக்குக் கொடுப்பது அங்கேபோய்சேர்வதெ ப்படி? ஸைக்கடவியாக்கும் காலலாளி களாக நரகத்தைக்காத்துநிற்பவர்கள், ஸைக்கூவியாக்கும் காவற்காரர்கள் தெய்வலோகத்திலிருப்பார்க ளோ? கற்பகவிருக்ஷம், காமதேனு, ரம்பை,ஊர்வசி இருக்கும்சொர்க்கத்தி ற்குப்போனவர்களுக்கு பூரிசி,பருப்பு, சொம்பு, வேஷ்டி தேவையுண்டோ? இல்லையே! மருபிறப்பெடுத்தவர்களுக் கு இவையாவும் எதற்காக? பஞ்சூத த்தில் கலந்தவர்களுக்கு பார்ப்பார்களி ன் படையலில்பலனுண்டா? கடவுளி டம் கலந்தவர்களே நரகத்திலிருப்பதா கச்சொல்லப்பிப்பதேபாவமல்லவா? பார் ப்பாருக்குக் கொடுத்தநஷ்டப்படுவது மல்லாமல்,கடவுளிடம் கலந்துபோன பிதிர்களே நரகத்திற்குக் கூப்பிடும்பா வமுமா நம்மைச்சாரவேண்டும். முன் னோர்களின் விஸ்வாசத்தைக்காட்டி வதற்கு இதைவிடப்பலன்கொடுக்கக் கூடிய வழிஅதேகமிருக்கிறதே. பெரி யவர்கள் விஸ்வாசத்திற்கும், ஞாபகத் திற்கும் வருஷத்திற்கு ஒருதரம் படைப்புப் போட்டு பந்துக்களோடி உண்பதென்னும் தமிழர்வழக்கமே பிதிர்களுக்குப் போதுமான காரணத்தை யும் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். தாழ்த்தப்பட்டவர் களிடமும் கருணைகாட்டும் படியாக வும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடியக்கமங்கலம்.

முபீதுல் இஸ்லாம் சோஷைட்டி.

மிஃராஜ் தினத்தைக் கொண்டாடும் பான் வேண்டி 8-12-31ல் சங்க ஹாலில் கூடிய பொதுக்கூட்டத்தில் ஜனாப்கள் மௌல்வி, எ. எல். இ. அப்துல்லத்தீப் சாஹிப், கா. ப. முஹம்மது இஸ்மாயில், ஏ. கே. அப்துர்ரஹீம் ஆகியோர்கள் "மிஃராஜ்" விஷயமாக சொற்பொழிவு ஆற்றியபின், சங்க அக்கத்தினர்கள் பிரசங்கப் பயிற்சி ஆரம்பமாகி ஜனாப் ஆலி ஜனுப் மௌல்வி, ஏ. எல். இ. அப்துல்லத்தீப் சாஹிப் வர்கள் தலைமையில் ஆரம்பமான போது ஜனாப்கள் எஸ் புருஹானுத்தீன், ம. மு. முஹம்மது சுல்தான், கே. அ. அப்துர்ரெஜாக் ஆகியவர்கள் "பிரசங்கப் பயிற்சியின் அவசியம் கடமை" என்பதைப்பற்றி சொற்பொழிவு ஆற்றினர்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதைத் திதிகள்.

சிதம்பரம் தாலூகா வெள்ளியக்குடி தோழர். எ. தங்கவேலு தன் தகப்பனார் திதியை, [1-12-31]லும் மிடூர் பட்டாமணியம் தோழர். எம். தெய்வசிகாமணி தன் பெரிய தாயார் திதியை [5-12-31]லும் எவ்விதமூடச்சடங்கு மின்னியில் சுத்த சுயமரியாதைப்படி நடத்தினார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

வேலையில்லை என்று ஏன் கலங்கிடப்பட வேண்டும்?

சொற்ப முதலை வைத்துக்கொண்டு நீங்களும் ஏன் ஓர் சிறிய கைத்தொழிலை நடத்தக்கூடாது?

மாதம் ஒன்றுக்கு நாறு ரூபாய் முதல் ஐந்நூறு ரூபாய்கள் வரை சம்பாதிக்கக்கூடியதும், வெகு சொற்பமான முதலை வைத்துக்கொண்டு ஆரம்பித்து நடத்தப்படக்கூடியதுமான "சோப் தொழிற்சாலை" ஒன்றை உடனே ஆரம்பித்து நடத்துங்கள். சோப் செய்யும் தொழிலிலீடுபட்ட அமேகர்பெரும் பணக்காரர்களாகியிருக்கின்றனர்! இலக்ஷக்கணக்கில் அன்னிய நாட்டு சோப்புகள் இந்தியாவில் இறக்குமதியாவதை நிறுத்த அதற்கு ஒவ்வொரு ஊரிலும் பல சோப் செய்யும் தொழிற்சாலைகள் உற்பத்தியாலுள்தான் முடியும்!!

நமது நாட்டு நன்மையைக்கருதியும், உங்களுடைய சுயலாபத்தை உத்தேசித்தும், இத்தொழிலில் உடனே ஈடுபடுங்கள். சலவைக்கும், ஸ்நானத்திற்கும் உபயோகப்படக்கூடிய சகல விதமான சோப்புகளைச் செய்யும் வழிகள் "சோப் செய்யும் முறை" என்னும் நூலில் விளக்கமாகக்கூறப்பட்டிருக்கின்றது. ஒரு சோப் தொழிற்சாலையை சொற்ப முதலுடன் ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்துவதற்கான பல ரகசியங்களும் அதில் அடங்கியிருக்கின்றன. இப்புஸ்தகத்தை உடனே வாங்கிப் படித்து அத்தொழிலை ஆரம்பித்து லாபமடையுங்கள்! சொற்பப்பிரதிகளே அச்சிடப்படுவதால் ஆர்டருக்கு முந்திக்கொள்ளுங்கள்!!

1931வது டிசம்பர்மீ 31உக்குள் முன்பணமனுப்பி ஆர்டர் செய்வோருக்கு விலை பிரதி ஒன்றுக்கு நபாய் இரண்டுதான்.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு முன்பணத்துடன் எழுதுக:—

மானேஜர், 'கற்பகம் கம்பெனி, 257, லிங்செட்டித்தெரு, ஜி. டி. மதராஸ்.

ஏழைகளுக்கோர் பெரிய அதிருஷ்டம்.

வினஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: சாந்தினி சௌக், டெல்லி.

சகல மனிதர்க்கும் ஏற்றது.

இணையற்ற நன்மைகள்! (1920-ல் ஸ்தாபிக்கப்பட்டது.) இனியும் தாமதிக்காதீர்கள்!!

90,000 மெம்பர்களுக்கு மேல்கொண்ட எங்களது பெரிய சங்கத்தில் சேருங்கள்.

(1912-ம் வருஷத்து இந்தியன் லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் சட்டதிட்டத்தின்படியும், 1913-ம் வருஷத்து இந்திய கம்பெனிகளின் சட்டத்தின்படியும் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

இந்தியா முழுவதிலும், பர்மா, பலுச்சிஸ்தானம், இலங்கை, பிரிட்டிஷ் கிழக்கிந்திய முதலிய பல நாடுகளிலும் பிரான்ச் ஆபீஸ்கள் உண்டு.

இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியரின் நிர்வாகத்தின் கீழேயே நடத்தி வரும் முதலும் இந்தியக்கம்பெனி இதுவே.

மூலதனம்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	10,00,000	கவர்ன்மெண்டு செக்யூரிட்டி டிபாசிட்டு	ரூ.	2,00,000
கொடுக்கப்பட்ட மூலதனம்	ரூ.	5,00,000	இன்றையதினரை வார்சுகளுக்கு செலுத்திய தொகை	ரூ.	5,00,000 க்கு மேல்
வசூலான மூலதனம்	ரூ.	2,07,750			
வாக்குறுதி செய்யப்பட்ட மூலதனம்	ரூ.	1,51,783			

கோடீச்வரரான வர்த்தகர் முதல் ஏழை விதவை வரையுள்ள, ஒவ்வொரு வகுப்பு ஜனங்களுக்கும் எற்றவாறு சகலவிதமான இன்ஷ்யூரன்ஸ் வேலைகளையும் நாங்கள் செய்து வருகிறோம்.

எங்களது அருமையான பல திட்டங்களில் முக்கியமானவைகள் வருமாறு:—

(பிரசித்தி பெற்ற கணக்கு ஆலோசனை நிபுணரான ஸ்ரீ ஜி. எஸ். மராத்தே, எம். ஏ. (பம்பாய்) எ. ஐ. ஏ. (லண்டன்) அவர்கள் நிறைவேற உறுதி கூறியுள்ள திட்டம்)

வைத்தியப் பரீக்ஷையுடன்.

1. ஆயுட்கால அஷ்யூரன்ஸ்.
2. எண்டோர்மெண்ட் அஷ்யூரன்ஸ்.
3. இரட்டிப்பு எண்டோமெண்ட் அஷ்யூரன்ஸ்.
4. குழந்தைகளின் படிப்புத்திட்டம்.
5. A–Z. வாதுகாப்புத் திட்டம்.
6. குடும்ப சஹாயநிதித்திட்டம்.
7. பயிற்சி எண்டோமெண்ட் திட்டம்.
8. டெம்பரரி இன்ஷ்யூரன்ஸ்.

வைத்தியப் பரீக்ஷையில்லாமல்.

1. குழந்தைகளின் கல்யாணத்திட்டம்.
2. பல பிரிவுகளுடன் கூடிய பொதுஜன இன்ஷ்யூரன்ஸ் திட்டம்.
3. சாலிரியமான முறைகளின்மீது அமைக்கப்பட்டுள்ள ஐச்சிய வாய்மைத் திட்டம்.

விசேஷ அபிப்பிராயங்கள்:—உண்மைநிலைகளை உடனே தெரிவித்தல். ஏஜண்டுகளுக்கு தாராளமான கமிஷன்.

வியாபாரமான ஏனும் நிலைகளும் விவரங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதவும்:—


வினஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், 22, இரண்டாவது லேன் பீச், மதராஸ்.

தாடிவைத்துக்கொள்ள

பழநி சி. எம். சாமி,

மன்மத ஒளிவிளக்கை

யே உபயோகியுங்கள்.



நீண்ட எண்ணம் எதிர்பார்த்த பூனைமுடியும், அடர்த்தியான உறுதியும், தேகவலிமையும், முகவசீகரமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

ஒருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆறாத குழிப்புண், தூறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கணடிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரூ 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை. ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்டால்கில் பாக்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி S. I.

புதிய சந்தாதாரர்களுக்கு

இலவசம்!

"குடி அரசு"க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூபாயை மணியார்டர் செய்பவர்களுக்கு பத்திரிகையுடன் 0—8—0 அணா மதிப்புள்ள குடி அரசு இலவசமாய் அனுப்பப்படும்.

வெளியிடுவோர் "குடி அரசு" ஈரோடு.

சுயமரியாதை

இயக்கப் பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ. ராமசாமி, 2. W. P. A. சௌந்திர பாண்டியர், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன், 5. கைவல்ய சாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்தி நாவி பாலசுப்ரமணியம், 8. சிவபூமி திருநாவுக்கரசு, 9. குரு கபி முனிசாமி, 10. லோகநாதபாம சுப்பிரமணியம் 11. கூலோசனை, பொன்னம்பலனார், 12. சிவராஜ் தம். ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகின்றவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தனி காப்பி வேண்டியவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:

பாலு & Co., No. 3 ஒப்பணக்காரத்தெரு, சேலம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக விலைக்குமேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குள் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் கிணீயான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்.

மணவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத்துணைக்கு ஒரு பெண் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:-வயது 55 ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பென்ஷன் மாதம் மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர மற்றபடியான தகுந்த பெருமையும் சொத்தும் உடையவர். நல்லதிடசரீரமும் அழகிய தோற்றமும்உடையவர். நல்ல குணமும் ஒழுக்கமும் உடையவர்.

பெண்ணுக்கு இருக்கவேண்டிய யோக்கியதைகளாவன வயது 30 முதல் 40 க்குட்பட்ட தாய் இருக்கவேண்டும். ஜாதி வேளாளர், நாயுடு, செட்டி, முதலியார், கவுண்டர், பிள்ளை ஆகிய ஜாதியார்களாய் இருந்தால் நலம். யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருந்தால் போதும். தன்மை விதவையானாலும் குற்றமில்லை. நல்ல சரீராக்ஷட்டுடன் வியாதியில்லாமல் இருத்தல்வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்துடன் தங்கள் உருவப்படத்துடன் எழுதுக. மலேயா

C/o "குடி அரசு" ஈரோடு.

நீங்கள்

கதரின் புராட்டை உணரவேண்டுமா?

அப்படியானால்

திரு. எஸ். ராமநாதன் எம். ஏ., பி. எல்.,
அவர்களால் தொகுக்கப்பட்ட

'கதர்-மூட நம்பிக்கை' என்னும் ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதன் விலை அணா 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

லண்டன் மகாநாட்டுச் செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திராட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா		ரூ. 1—2—0
தனிப்பிரதி	... ...	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா		ரூ. 18—0—0
ஆறுமாதம்	...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அன்னை அப்டோன் படங்கள், அறியகட்டுரைகள், விடைகள், கவிதைகள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஒரே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

மதியலும், தேசியமும் எலக்ஷன் சூழ்ச்சி.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதார்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கஷ்டக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரை களைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப் பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து கொள்ளற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணை. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து வற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணை. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணை. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் பாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் ங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒரு முறை படித் ால் ஆரியர்களின் புராதன ஞாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெ ரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணை. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணை. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணை. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணை. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான--சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணை. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணை 0—2—0.

சுயமரியாதைதப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணை 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 0—3—0

பங்களும் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணை 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாம இருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணை 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரி தப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிரு கிறது. சென்னை, பண்டிதர் க. சுப்பிரமணிய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணை 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராம வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமைய வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளிய டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உண லாம்.

இதன் விலை அணை 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள அவர்களால் வெளியிடப்பட்டது.

ரோஜா முத்தையா
ஆய்ச்சி நூலக அறக்கட்டளை